07TH JUNE 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 79 | பக்கங்கள் - 15 | editor.uthayam@gmail.com



## கொள்கலன் விடுவிப்பு விவகாரம்!

### 4மணி நேரம் வாக்குமூலம் வழங்கிய தயாசிறி

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் அளிக்க வந்த பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர, சுமார் 4 மணி நேரம் வாக்குமூலம் அளித்த பின்னர் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

322 கொள்கலன்களை விடுவித்த சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் அளிக்க நேற்று (06) குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கல்வித் துறையில் பாரிய மாற்றங்கள்; ஆறு உப குழுக்கள் நியமனம்

### சிறுபான்மை பிரதிநிதிகளும் உள்ளடக்கம்

### பிரதமர் ஹரிணி அதிகாரிகளுக்கு ஆலோசனை

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வித் துறையில் நவீன மாற்றங்களுக்காக 6 உப குழுக்களை நியமிக்க கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அலுவல்கள்

02ம் பக்கம்பார்க்க...

## பாடசாலைகளில் டெங்கு தீவிரம்!

### கல்வியமைச்சு புதிய சுற்றறிக்கை

சுகாதார அமைச்சுடன் இணைந்து வேலைத்திட்டம்

நாட்டில் பதிவான டெங்கு நோயாளர்களில் சுமார் 25 வீதமானோர் பாடசாலை

03ம் பக்கம்பார்க்க...

## ஹஜ் கிரியைகள் அமைதிக்கான சிறந்த செய்தியாகும்



### ஜனாதிபதியின் பெருநாள் வாழ்த்து செய்தி

உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் மிகுந்த பக்தியுடன் இன்று (07) ஹஜ் பெருநாளை

03ம் பக்கம்பார்க்க...

## இடிபாடுகளுக்கு மத்தியில் காஸா மக்கள் பெருநாள் தொழுகை



இஸ்ரேலின் கொடூரமான விமான தாக்குதல்கள், கெடுபிடிகள்,உணவு விநியோகத் தடைகள், இடிபாடுகளுக்கு மத்தியில் காஸா மக்கள் ஈதுல் அழ்ஹா பெருநாள் தொழுகையில் பங்கேற்றிருக்கும் காட்சி.

## AI ஊடாக மேம்படுத்தப்பட்ட 2025 ஹஜ் ஏற்பாடுகள்

பன்மொழி ரோபோக்கள்

ஆயிரக்கணக்கான ரோன்கள்

03ம் பக்கம்பார்க்க...

## வரலாற்றுச் சிறப்பு மிக்க சேவைகளை ஹாஜிகளுக்கு வழங்கினோம்



### சவூதித் தூதுவர் அமீர் அஜ்வத்

இலங்கை ஹஜ் வரலாற்றில் முதற் தடவையாக ஹாஜிகளுக்கு மிகச் சிறப்பான வெற்றிகரமான சேவைகளை வழங்க முடிந்ததாக சவூதி அரேபியாவுக்கான

02ம் பக்கம்பார்க்க...

## இலங்கையின் ஒற்றுமை, சக வாழ்வுக்கு அர்ப்பணிக்கும் நாளாக அமையட்டும்



### ஹஜ் வாழ்த்துச் செய்தியில் சஜித் பிரேமதாச

உலகம் முழுவதும் வாழும் இஸ்லாமியர்கள் ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் இந்த தருணத்தில் இலங்கையில் வாழும் அனைத்து இஸ்லாமியர்களுக்கும் எனது

03ம் பக்கம்பார்க்க...

## காஸா உட்பட துன்பப்படும் மக்களுக்காக பிரார்த்திப்போம்

### அ.இ. ஜம்இய்யதுல் உலமா வேண்டுகோள்

02ம் பக்கம்பார்க்க...

## காலிமுகத் திடலில் ஹஜ் பெருநாள் தொழுகை



(அஷ்ரப் ஏ சமத்)

ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை இம்முறையும் இலங்கை மேமன் சங்கத்தினரால் கொழும்பு

03ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி

Amãna Bank

## காஸா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்லாம் முஸ்லிம்களுக்கு வழங்கியிருக்கும் இரு பெருநாட்களில் ஒன்றான ஹஜ்ஜுடைய பெருநாளை உலகளாவிய ரீதியிலுள்ள சுமார் 200 கோடிக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கொண்டாடிவரும் இந்நாட்களில் இலங்கை முஸ்லிம்களாகிய நாமும் சிறப்பாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அல்ஹம்துலில்லாஹ்!

இந்த ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடுகின்ற அனைத்து முஸ்லிம்களுக்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை சார்பில் ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்பெருநாள் தினத்திலே, இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் ஒன்றான ஹஜ்ஜினை நிறைவேற்றுவதற்காக உலகின் பல நாடுகளில் இருந்தும் புறப்பட்ட சுமார் 16 இலட்சத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் அரபாவுடைய கடமையினை முடித்தவர்களாக மினாவிலும் மக்காவிலும் ஒன்று திரண்டிருக்கின்றனர். இவர்களில் இலங்கையிலிருந்து எமது நாட்டின் தூதுவர்களாக ஹஜ்ஜுக்கு சென்றிருக்கும் 3,500 ஹாஜிகளும் உள்ளடங்குகின்றனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாழ்வில் ஒரேயொரு முறை நிறைவேற்றிய ஹஜ்ஜிலே அங்கு கூடியிருந்த ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஸஹாபாக்களை ஒன்றுதிரட்டி 09ஆம் நாள் அரபா உரையினை நிகழ்த்தினார்கள். 'ஹஜ்ஜத்துல் வதா' என போற்றப்படும் அந்த உரையானது மனித உரிமை, சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் நீதி ஆகியவற்றின் முழுமையான பிரகடனமாக திகழ்வதோடு அவற்றை வலியுறுத்தியும் நிற்கிறது. அதனை நினைவுகூரக்கூடிய நாட்களாக நாம் இருக்கும் இந்நாட்கள் திகழ்கின்றன.

அதேபோல நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனது கட்டளைகளுக்கு முழுமையாக கட்டுப்பட்டு தன் வாழ்வின் அனைத்து அம்சங்களையும் இறைவனுக்காகவே அமைத்துக்கொண்ட முன்மாதிரியையும் ஹஜ்ஜுடைய இத்தினங்கள் எமக்கு நினைவூட்டுகின்றன.

நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சோதனைகளின் போது கடைப்பிடித்த பொறுமை பற்றியும் அவர்களது தியாக வாழ்வு பற்றியும் அதற்காக இறைவன் அவருக்கு வழங்கிய சிறப்புக்கள் பற்றியும் 25 அத்தியாயங்களில் 63 இடங்களில் அல்-குர்ஆனும் எமக்கு ஞாபகமூட்டுகிறது.

இத்தியாகத் திருநாள் கற்றுத்தரும் பாடங்களான அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு முழுமையாக அடிபணிதல், அல்லாஹ்வின் மீதான நேசம், அர்ப்பணிப்பு, தியாகம், பொறுமை, தவக்குல், முன்மாதிரிமிக்க சிறந்த பிள்ளை வளர்ப்பு, பெற்றோருக்குக் கட்டுப்படல் போன்றவற்றை எமது வாழ்விலும் கடைபிடித்து வாழ்வதோடு எமது குடும்ப உறவுகளிடமும் இவ்வாறான உயர்ந்த பண்புகளை வளர்த்து ஈருலக வாழ்விலும் வெற்றிபெற முயற்சி செய்வோமாக!

அத்தோடு சர்வதேசத்திலும் நம் நாட்டிலும் குறிப்பாக பலஸ்தீன் காஸா பகுதிகளிலும் சமாதானமும் ஐக்கியமும் மலர்ந்திடவும் கஷ்டப்படும் மக்களது நிலமைகள் சீராகிடவும் எல்லாம் வல்ல அல்லாஹ் துணை புரிவானாக என்றும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை பிரார்த்தனை செய்கிறது.

---

## கல்வித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

பிரதமர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சருமான (கலாநிதி) ஹரினி அமரசூரிய, கல்வி, உயர் கல்வி கௌரவ பிரதி அமைச்சர் (வைத்தியர்) மதுர செனெவிரத்ன மற்றும் தொழிற் கல்வி பிரதி அமைச்சர் நலின் ஹேவகே ஆகியோரின் தலைமையில் இந்தக் குழுபாராளுமன்றத்தில் கூடிய போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கமைய, கல்வி மறுசீரமைப்பு உபகுழுவில் (கலாநிதி) ஹரினி அமரசூரிய (தலைவர்), அனுர கருணாதிலக்க, ரோஹிணி குமாரி விஜேரத்ன, ஞானமுத்து ஸ்ரீநேசன், சுனில் ராஜபக்ஷ ஆகியோரும், பாடசாலைகளில் காணப்படும் மனித வளம் மற்றும் பௌதீக வள பற்றாக்குறை பற்றிய உப குழுவில் (கலாநிதி) கௌஷல்யா ஆரியரத்ன (தலைவர்), மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், சந்தன தென்னகோன், சுகத் வசந்த த சில்வா மற்றும் தர்மப்ரிய விஜேசிங்ஹ ஆகியோரும் அடங்குகின்றனர்.

அத்துடன், இடைநிலை வகுப்புகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளல் பற்றிய உப குழுவில் சமன்மலீ குணசிங்ஹ (தலைவர்), அபூபக்கர் ஆதம்பாவா, சஞ்ஜீவ ரணசிங்ஹ மற்றும் ஆர்.எம். சமந்த ரனசிங்ஹ ஆகியோரும், கல்விச் சபையை நிறுவுதல் பற்றிய உப குழுவில், மஹிந்த ஜயசிங்க, (தலைவர்), (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன், மஞ்ஜுள சுரவீர ஆரச்சி மற்றும் ருவன் மாபலகம ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

மேலும், உயர் கல்வித் பிரிவுகள் பற்றிய உப குழுவில் (வைத்தியர்) மதுர செனெவிரத்ன (தலைவர்), (கலாநிதி) உபாலி பன்னிலகே, றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, நிமல் பலிஹேன மற்றும் மஞ்சுல சுகத் ரத்னாயக ஆகியோரும், திறன் கல்விப் பிரிவு பற்றிய உப குழுவில் நலின் ஹேவகே (தலைவர்), டி.வீ. சானக, சிவஞானம் சிறீதரன் மற்றும் இம்ரான் மகரூப் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

பல்கலைக்கழக பிரவேசம் மற்றும் பல்கலைக்கழகத்தில் இயலாமையுடைய மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படாமல் இருப்பதற்கும் அவர்களுக்கான வசதிகளை விருத்தி செய்தல், நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் காணப்படும் சிக்கல்கள், ஆசிரியர் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு சிக்கல்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இது தொடர்பில் எடுக்கக்கூடிய துரித நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிரதமர் ஆலோசனை வழங்கியதுடன் தேவையான கொள்கை ரீதியான மாற்றங்களுக்காக அரசாங்கம் அவசரமாக தலையிடுவதாகத் தெரிவித்தார்.

# கொள்கலன்களில் ஆயுதங்கள் அர்ச்சுனா கருத்தால் சர்ச்சை

## நிராகரிக்கும் பாதுகாப்பு அமைச்சு

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஆயுதங்களே 300 கொள்கலன்களில் கொழும்பு வந்தன என நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளதை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரின் தெரிவித்துள்ள விடயங்கள் முற்றிலும் ஆதாரமற்றது: பொய்யானது என என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தா தெரிவித்துள்ளார். இந்த குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் எவையும் இல்லை என தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு விடயங்களை அரசியல்மயப்படுத்தக்கூடாது, பொதுஅரங்குகளில் பிழையாக சித்தரிக்ககூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வரலாற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் தெரிவித்தார்.

அரபா தினத்தன்று இலங்கை ஹஜ்ஜாஜிகளுக்கான சேவைகள் குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது இலங்கையிலிருந்து இம்முறை ஹஜ்ஜுக்குச் சென்ற 3500 ஹாஜிகளுக்கும் ஒரு நிறுவனத்தின் கொடியின் கீழ் சேவைகளை வழங்க முடிந்ததையிட்டு தூதுவர் என்ற வகையில் நான் பெருமைப் படுகிறேன். கடந்த காலங்களில் இலங்கையிலிருந்து சென்ற ஹாஜிகள் பல்வேறு கூடாரங்களில் தங்கியிருந்த நிலையில் பல்வேறு சிரமங்களுக்கு முகங் கொடுக்க நேர்ந்தது. என்றாலும் இம்முறை இலங்கை ஹாஜிகள் ஒரே இடத்தில் ஒன்றாகத் தங்க வைக்கப்பட்டு சகலரும் திருப்தியடையக் கூடிய வகையில் வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

உணவு, வசதியான கூடாரங்கள்,மல சல கூட வசதிகள் உட்பட இன்னோரன்ன சேவைகளைப் பெற்றுக் கொடுக்க முடிந்தது.

இம்முறை பல குறைபாடுகள் நடந்திருக்கலாம். முதற் தடவையாக இப்படியொரு பாரிய நடவடிக்கையை மேற்கொண்டிருந்தமையினால் குறைபாடுகள் நடந்திருக்கலாம். அடுத்த ஆண்டு குறைபாடுகளை இனம் கண்டு மிகச் சிறப்பான கச்சிதமான சேவைகளை வழங்க முடியுமென எதிர்பார்க்கிறோம்.

இந்தப் பணிகளை சிறப்பாக முன்னெடுக்க சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய சவூதி அரேபிய மன்னர் மற்றும் இளவரசர் அப்துல்லாஹ் மற்றும் அதிகாரிகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர் இலங்கை அரசாங்கம் ஹாஜிகளுக்கான திருப்தியான சேவைகளை வழங்க வேண்டுமென்ற நோக்குடன் ஒரு தேசிய மட்டக் குழுவினை அமைத்து அதன் மூலம் பாரிய பணிகளை முன்னெடுத்தது.இந்த நடவடிக்கைகளுக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க உட்பட அதிகாரிகளுக்கும், இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் அல் கஹ்தானி உட்பட தூதரக அதிகாரிகளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். என்றும் அவர் தெரிவித்தார்.

## காலிமுகத்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

காலிமுகத்திடலில் இன்று 07.06.2025 காலை 08.00 மணிக்கு முப்தி முஸ்தபா றீசா சபீர் மிஸ்பாஹி தலைமையில் தொழுகை நடைபெற்றது.

இந் நிகழ்வில் அரபு நாட்டு வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா உட்பட ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கலந்து கொண்டு தத்தமது ஈத் முபாரக் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டன.

## ஹஜ்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கொண்டாடுகின்றனர்.

இஸ்லாமியர்களின் நம்பிக்கையின்படி, அல்லாஹ் மீதான இப்ராஹிம் நபியின் பக்தியையும் ஒப்பற்ற தியாகத்தையும் குறிக்கும் ஹஜ் பெருநாள், இஸ்லாத்தின் ஐந்து பெரும் கடமைகளில் ஐந்தாவது கடமையாகக் கருதப்படும் மக்கா யாத்திரையின் காரணமாக தனித்துவமானதாக அமைகின்றது.

மதம், மானிட சமூகத்தை மனித நேயத்துடன் பூரணப்படுத்தவும், நல்ல சமுதாயத்தை உருவாக்கவும் எதிர்பார்க்கிறது. உலகம் முழுவதிலுமிருந்து வருகை தருகின்ற அனைத்து முஸ்லிம்களும் ஒற்றுமையுடன் இறைவனை வணங்குவதற்காக மக்காவிற்கு வரும் இந்த ஹஜ் யாத்திரை, ஏனைய அனைத்து மதங்களுடனும் சமத்துவமாக வாழும் போதனையை உள்ளடக்கியது என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

மேலும், இந்த ஹஜ் யாத்திரை அர்ப்பணிப்பு மற்றும் தியாக வாழ்க்கை தொடர்பான உதாரணங்களை சித்தரிப்பதுடன், ஹஜ் கொண்டாட்டத்தின் முக்கிய நோக்கமாகவும் இது இருக்கின்றது. உண்டு - இல்லை என்ற இடைவெளி மற்றும் வேறுபாடுகளைக் கடந்து சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் உருவாக்குவது ஹஜ்ஜின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

ஒரு நாடாக நம் முன்னால் உள்ள சவால்களை முறியடித்து நாம் விரும்பும் முன்னேற்றகரமான மற்றும் நாகரிகமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றத்தை மேற்கொள்வதில் அனைவரின் கூட்டு முயற்சி, தலையீடு மற்றும் பங்கேற்பு மிகவும் முக்கியமானது. ஹஜ் கொண்டாட்டம் அந்த பொதுவான நோக்கத்திற்காக கைகோர்க்க ஒரு சிறந்த தளத்தை உருவாக்குகிறது என்பதையும் நான் இங்கு நினைவுகூர்கிறேன்.

உலக மக்கள் அனைவரின் இதயங்களிலும் சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் தியாக உணர்வுகளை உருவாக்கும் ஹஜ் கொண்டாட்டம் உலக அமைதிக்கான ஒரு சிறந்த செய்தியாகும்.

ஒருவரையொருவர் சந்தேகத்துடனும் வெறுப்புடனும் பார்க்கும் சமூகத்திற்குப் பதிலாக, அனைவரும் சகோதரத்துவத்துடனும் அன்புடனும் வாழும் முன்னேற்றகரமான மற்றும் நாகரிகமான நாட்டைக் கட்டியெழுப்ப நமது அரசாங்கம் எடுக்கும் முயற்சியில், தமது புனிதமான நம்பிக்கையுடன் அனைத்து இஸ்லாமியர்களும் ஒன்றாகக் கொண்டாடும் ஹஜ்ஜுப் பெருநாள், நமது பயணத்திற்குப் பெரும் ஆசிர்வாதம் ஆகும்.

இந்நாட்டிலும் உலகெங்கிலும் உள்ள அனைத்து இஸ்லாமியர்களுக்கும் ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் நல்வாழ்த்துக்கள்.

## இலங்கையின்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நல்வாழ்த்துக்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தருணத்தில் ஹஜ்ஜுப் பெருநாளின் உண்மையான அர்த்தத்தை ஆழமாக புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது. புனித ஹஜ் யாத்திரையானது இஸ்லாத்தின் வழிகாட்டுதலின்படி நிறைவேற்றப்படும் ஒரு கடமையாகும். ஒவ்வொரு இஸ்லாமியரும் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டிய 5 கடமைகளை இஸ்லாம் மார்க்கம் சுட்டிக்காட்டியுள்ளது. கலிமா (இறை நம்பிக்கை) ஐவேளைத் தொழுகை, நோன்பு, சகாத் எனப்படும் தர்மவரி செலுத்துதல் மற்றும் புனித ஹஜ் பயணம் ஆகியவையாகும்.

இஸ்லாத்தின் இந்த 5 கடமைகளும் ஒருவரின் வாழ்க்கையில் கட்டியெழுப்பப்பட வேண்டிய பல்வேறு நற்குணங்களுக்கு வழிகாட்டுதலாகும். அமைதி, சகவாழ்வு, சகோதரத்துவம், தியாகம் மற்றும் ஆன்மீக நல்லொழுக்க வளர்ச்சி இவற்றில் முக்கியமானவையாகும்.

தற்போதைய உலகம் எதிர்கொண்டுள்ள சவால்களுக்கு மத்தியில் சமூகத்தில் கட்டியெழுப்பப்பட வேண்டிய அத்துடன் மேற்கொள்ள வேண்டிய நல்ல வாழ்க்கை நெறிமுறைகளுக்கு இஸ்லாத்தின் இந்த வழிகாட்டுதல்கள் ஒரு முன்மாதிரியாக இருப்பது தெளிவாகிறது. இந்த மார்க்கம், இந்த வழிகாட்டுதல்கள் முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாமல் எந்த மதத்தவருக்கும் தான் நம்பும் மதத்தின்படி தனது வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கு ஒரு உதவியாக இருப்பதைக் குறிப்பிட வேண்டும்.

ஹஜ் யாத்திரை அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டுமென்றால் நாம் செய்ய வேண்டியது நபிகள் நாயகம் காட்டிய வாழ்க்கை நெறிக்கு ஏற்ப செயற்படுவதாகும். அத்தகைய வாழ்க்கை நெறியுடன் செயற்படும் ஒரு சமூகத்தில் மற்றொருவருக்கு எதிராக நிற்பதற்கோ அல்லது தான் நம்பும் மதத்தின்படி வன்முறையில் ஈடுபடுவதற்கோ வாய்ப்பில்லை. உண்மையான ஹஜ்ஜுப் பெருநாள் என்பது இஸ்லாமிய வழிகாட்டுதலை நன்கு புரிந்துகொண்டு முழு மகத்தான சமூகத்திற்கும் அது குறித்த செய்தியை எத்திவைப்பதாகும்.

உலகம் முழுவதும் வாழும் இஸ்லாமியர்கள் இன்று கொண்டாடும் ஹஜ்ஜுப் பெருநாள் நமது சமூகத்தின் ஒற்றுமை, அமைதியான சகவாழ்வுக்கு அர்ப்பணிக்கும் நாளாக அமையட்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

## பாடசாலைகளில்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மாணவர்கள் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

50 வீதமான பாடசாலைகளில் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அதன் சமூக மருத்துவ நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

அவற்றில் 14 வீதமான இடங்களில் நுளம்பு குடம்பிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலை சூழலை சுத்தமாக வைத்திருப்பதை உறுதி செய்வது மிகவும் அவசியம் என வலியுறுத்தியுள்ளது.

இதனிடையே, பாடசாலைகளில் டெங்கு நோய் கட்டுப்படுத்தலுக்கான புதிய சுற்றறிக்கையை கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

பாடசாலைகளில் வயலங்களாகப் பிரித்து அவற்றை சுத்தம் செய்து பொறுப்பான ஆசிரியரை நியமிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் டெங்கு நுளம்பு இல்லாத வலயங்களாக மாற்றுவதற்கு சுகாதாரத் துறையுடன் இணைந்து விசேடத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கல்வி பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 24,361 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

## AI...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நவீன தொழில்நுட்பங்களை பிரயோகிக்கும் முக்கிய மையமாக ஹஜ் மாறி வருகிறது. இதற்காக ஸ ஊதி அரேபிய இராச்சியம் (KSA) தொடர்ந்தும் யுஜ-யில் அதிக அளவில் முதலீடு செய்து வருகிறது.

பாதுகாப்பு, சுகாதாரம், நெரிசல் கட்டுப்பாடு உட்பட ஒட்டுமொத்த ஹஜ்ஜின் சேவைகளும் யுஜ ஊடாக மேம்படுத்தப்பட்டுள்ளது . நெருக்கடி நிலைமைகளுக்கு முகம் கொடுக்க முக அங்கீகாரம், பன்மொழி ரோபோக்கள், கமெராக்கள் மற்றும் ஆயிரக்கணக்கான ட்ரோன்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஹஜ்ஜாஜிகளுக்குத் தேவையான நேரடித் தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் வழி காட்டல்களை வழங்கவும் "AI மொபைல் அப்" வழங்கப்பட்டுள்ளது.




வெப்ப நிலையை உணர்ந்து அதற்கேற்ப குளிரை வழங்கக்கூடிய வகையில் AI குளிரூட்டிகள் பரவலாக பொருத்தப்பட்டுள்ளன.

அதிலும் விசேடமாக இம்முறை அரஃபாத் குத்பா பிரசங்க உரை, நிகழ் நேரத்தில் (Real Time) 35 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு ஒளி பரப்பப்படுகிறது. ஹஜ் யாத்திரிகள் உட்பட உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கானவர்கள் தங்கள் சொந்த மொழியில் அரஃபாத் பிரசங்கத்தை கேட்க முடியும்.

மத வழிபாட்டுத் தளங்களுடன் AI அமைப்புகளை ஒருங்கிணைப்பது அதன் செயற்திறனுக்கான உந்துதலை வழங்குகிறது. இவ்வாறான நவீன கண்டுபிடிப்புக்களின் மையமாக சஊதி அரேபியா மாறி இருக்கிறது.

**(ஹரீஸ் ஸாலிஹ்)**

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 JUNE 07 - SATURDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# சகோதரத்துவத்தை வளர்க்கும் பெருநாளாக அமையட்டும்

உலகெங்கிலும் வாழும் முஸ்லிம்கள் ஹஜ் பெருநாளை கொண்டாடுகின்றனர். ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக 15 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் புனித மக்காவில் அணி திரண்டு இருக்கின்றார்கள்.

சவுதி அரேபியா அரசும் இவர்களுக்காக சிறப்பான ஏற்பாடுகளை மேற்கொண்டு இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஹஜ்ஜ/டன் இணைந்ததாக உழ்கிய்யா கடமை அமைந்துள்ளது.

உழ்கிய்யா கடமை பெருநாளின் ஒரு முக்கிய அம்சமாகும். இப்ராஹிம் நபி அவர்களுக்கு தன் அருமை மகன் இஸ்மாயில் நபியை அறுத்து பலியிடுமாறு இறைவன் கனவில் விடுத்த உத்தரவை அடுத்து இந்த கடமையை ஹஜ் மாதத்தில் முஸ்லிம்கள் நிறைவேற்றி வருகின்றனர். முஸ்லிம்கள் தொன்று தொட்டு இந்த கடமையை உயர்ந்த வணக்க வழிபாடாக மேற்கொண்டு வருகின்றனர்.

சுன்னத்தான ஒரு கடமையாக இது இருந்த போதிலும் சில அறிஞர்கள் இதனை பர்ளான கடமை என்றும் தெரிவிக்கின்றனர். உழ்கிய்யா பற்றி இறைவன் அல்குர்ஆனிலே ”இறைவனுக்காக நீர் தொழுது குர்பானி கொடுப்பீராக” (108:02) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மேலான வணக்கத்தை அதன் விதிமுறைகளை பேணி நிறைவேற்றுவது குறித்து ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். நாம் வாழும் நாடு ஒரு பௌத்த நாடாகும். இந்நாட்டில் 1959 ஆம் ஆண்டு 29ஆம் இலக்க விலங்கு சட்டம் அமுலில் உள்ளது. இவற்றை கருத்தில் கொண்டு இந்த கடமையை நிறைவேற்ற முற்பட வேண்டும். இஸ்லாமிய வரையறைகளுடன் நாட்டின் சட்டத்தையும் மதித்து உழ்கிய்யா கடமைகளை நிறைவேற்ற வேண்டும். புதிய அரசாங்கம் பதவியேற்ற பின் நாம் எதிர்கொள்ளும் முதலாவது ஹஜ் பெருநாள் இதுவாகும். அரசாங்கம் வழமை போன்று இந்த ஹஜ் பெருநாளை சிறப்பாக கொண்டாடுவதற்கு வசதிகளை எல்லாம் செய்து தந்திருக்கின்றது. ஹஜ் பெருநாளுடன் இணைந்ததாக பொசன் போயா தினமும் வருகின்றது.

போயா தினத்தன்று உழ்கிய்யா நிறைவேற்றுவதனை தவிர்த்துக் கொள்ளுமாறு நாட்டு முஸ்லிம்களை கேட்டுக் கொள்கின்றோம். உழ்கிய்யாவை நிறைவேற்றுவது தொடர்பாக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா 19 அம்சங்களை உள்ளடக்கிய வழிகாட்டல்களை வெளியிட்டுள்ளது. நாடெங்கிலும் உள்ள பள்ளிவாசல்களுக்கு இந்த வழிகாட்டல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஊடகங்களிலும் இவை பிரசிக்கப்பட்டுள்ளன. இந்த வழிகாட்டல்களைபேணிநடந்தால் இந்தகடமையைபிரச்சனைகள் இன்றி மேற்கொள்ள முடியும். ஒவ்வொரு பள்ளிவாசலிலும் தனது எல்லைக்குட்பட்டவர்களுக்கு இந்த உழ்கிய்யா கடமை தொடர்பாக சரியான வழிகாட்டல்களை உலமாக்களும் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களும் எடுத்துக் கூற வேண்டும். நாட்டின் சட்ட திட்டங்களை நினைவு படுத்த வேண்டும்.

அரபா நாளில் நோன்பு பிடிப்பது பற்றியும் கருத்து வேறுபாடுகள் உண்டு. நம்மவர்கள் இது ஜம்இய்யதுல் உலமா வழங்கும் வழிகாட்டல்களை பின்பற்றுவதே சிறந்ததாகும். ஹஜ் பெருநாளை கொண்டாடும் சகலருக்கும் உதயம் தனது பெருநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு இந்த உயர்வான வணக்க வழிபாடு மூலம் சகலருக்கும் அதன் பரக்கத் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கிறது. அதே நேரம் இந்த பெருநாளானது நாட்டில் சகோதரத்துவத்தை வளர்க்கும் ஒரு பெருநாளாக அமையட்டும்.

# மறுமை வாழ்வை ஆரம்பித்தார் என்.எம்.எம் றெஸீன் ஆசிரியர்!

(எம்.ஜே.எம். தாஜ்தீன்)

பலகத்துறை மண்ணின் மைந்தன் என்.எம். எம். றெஸீன் (றெஸீன் மாஸ்டர்) இன்று (05.06.2025) வியாழக்கிழமை கொழும்பு மாளிகாவத்தை ஜ/ம்மா மஸ்ஜித் வீதியில் உள்ள தமது இல்லத்தில் காலமானார்.

அன்னாரின் ஜனாஸா இன்று மாலை கொழும்பு மாளிகாவத்தை மையவாடியில் அஸர் தொழுகையின் பின்னர் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மூன்று பெண் மக்களின் தந்தையான இவர் தமது 84 ஆவது வயதில் காலமானார்.

ஆசிரியராக, அதிபராக, கொழும்பு ஸாஹிராக் கல்லூரி தமிழ் பிரிவின் தலைவராகசிறப்பான கல்விச் சேவை புரிந்த செம்மல் இவர்.

அந்நாளில் அறிஞர் யூ.எம் தாஸ ின் நத்வி அவர்களின் ஊடகத்துறைச் செயலாளராகப் பணிபுரிந்தார்.



தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற இவர் முழுத் தீவுக்குமான சமாதான நீதவானாகவும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளராகவும் திகழ்ந்தார்

நீதிமன்றங்களிலும் சில காலம் மொழிபெயர்ப்பாளராகக் கடமை புரிந்தார்.

இலக்கியத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர் தமது முதுமைக் காலத்திலும் இலக்கிய விழாக்களை அலங்கரித்தவர்.

எனது “கம்மல்துறை வரலாறும் வாழ்வியலும்” நூல் வெளியீட்டு விழாவுக்கு தலைமை தாங்கி சிறப்பாக நடத்தியவர்.

திருமண பந்தத்தால் கொழும்பில் வாழ்ந்ததால் இன்றைய எமதூர் இளைய தலைமுறையினருக்கு அறிமுகம் இல்லாத இலைமறை காய்.

பலகத்துறையின் சிற்பி சேர் ராஸிக் பரீத் அவர்களின் முதுமைக் காலத்தில் அன்னாரை பலகத்துறை க்கு அழைத்து வந்து அன்னாரை கௌரவித்த நன்றி உள்ளம் கொண்டவர்.

கொழும்பு வெல்லம்பிட்டி மஸ்ஜிதுஸ் ஸபா ஜ/ம்ஆப் பள்ளிவாசலின் நிர்வாகசபைச் செயலாளராக தொடர்ந்து இருபது வருடங்களுக்கு மேல் பணியாற்றி அப்பிரதேச மக்களுக்கு அளப்பரிய சேவைகள் புரிந்தவர்.

கொழும்பு வை.எம்.எம். ஏ. இயக்கத்திலும் சில காலம் செயலாளராகப் பணியாற்றினார்.

# பேருவளை நிருபர் முக்தாரின் சகோதரி காலமானார்

*சீனங்கோட்டை யூஸூப் அவனீயூவைச் சேர்ந்த மர்ஹூம்களான அல் ஹாஜ் பஹாவுத்தீன் ஸித்தி ரகீபா தம்பதிகளின் புதல்வியும், மர்ஹூம் முஹம்மத் ஸாரிஸின் அன்பு மனைவியுமான பௌஸூல் ஹினாயா பெருகமலை இல்லத்தில் காலமானார்.*

*அனனார் ஊடகவியளாலர் அல் ஹாஜ் B.M.முக்தார் மற்றும் அல் ஹாஜ் B.M இப்திகார் ஆதியோரின் சகோதரியும் ஆவார்.*

*அன்னாரின் ஜனாஸா நேற்று புதன் கிழமை மாலை சீனங்கோட்டை பாஸியா பெரிய பள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.*



# இலங்கை ஊடகவியலாளர்களுக்கு துருக்கி நாட்டின் காலை உணவு

**(அஷ்ரப் ஏ சமத்)**

இலங்கையில் உள்ள துருக்கி நாட்டின் தூதுவர் செமிஹ் லுட்டு ருஹட் சிரேஷ்ட ஊடகவியலாளர் களை கொழும்பு 8 ல் உள்ள தனது அலுவலக பங்களாவுக்கு அழைத்து துருக்கி நாட்டின் காலை உணவினை அவருடன் உண்பதற்காக அழைப்பு விடுத்திருந்தார்

அத்துடன் தனது நாட்டின் உணவு முறைகள் அந் நாட்டில் உற்பத்தியாகும் பழவகைகள் உணவுத் தானியங்கள் பற்றி ஊடகவியலாளருக்கு விரிவாக விளக்கமளித்தார் அங்கு சீஸ், கோதுமை தின்பண்டங்கள், தேன், ஜேம், மரக்கறி பழ வகைகள், சொசேசஸ், பட்டர் துருக்கியில் அருந்தும் கோப்பி, தேயிலை, ஒலிவ் காய்கள் போன்ற உணவுப் பண்டங்களை. உண்டு உணவுகளையும் சிரேஷ்ட ஊடகவியலாளர் மகளுடன் பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் உள்ள துருக்கி நாட்டின் தூதுவர் செமிஹ் லுட்டு ருஹட் கொழும்பு 8 ல் உள்ள தனது அலுவலக பங்களாவுக்கு சிரேஸ்ட ஊடகவியலாளர்களை அழைத்து துருக்கி நாட்டின் உற்பத்தி உணவுபண்டங்களை காலை உணவினை பகிர்ந்தளித்தார்.

துருக்கி நாட்டிலிருந்து உற்பத்தியாகும் பழ வகைகள்,





தாணியங்கள் இலங்கையில் அறிமுகப்படுத்தினார். அத்துடன் துருக்கி நாட்டில் இருந்து சுற்றுலாப் பிரயாணிகள் இலங்கை வந்தடைகி ன்றனர் அத்துடன் இலங்கையின் தேயிலையை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் துருக்கியும் உள்ளது. எதிர்வரும் மாத்தில் இலங்கையுடனான பொருளாதார வர்த்தக சம்பந்தமாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் அத்துடன் இலங்கையர் சுற்றுலா பிரயாணிகளாக துருக்கி செல்கின்றனர் எனவும் தூதுவர் செமிஹ் லுட்டு ருஹட் தெரிவித்தார் .

# பேருவளை நகர சபைக்கு ஐக்கிய மக்கள் சக்தி போனஸ் உறுப்பினர்கள் தெரிவு

**(பீ.எம் முக்தார்)**

பேருவளை நகர சபையின் ஐக்கிய மக்கள் சக்தி போனஸ் (பட்டியல்) உறுப்பினர்களாக எம்.என்.எம் இர்ஷாத் மற்றும் ரிஹானா ரவ்ப் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு ள்ளனர். ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைத்த இரு கோனஸ் (பட்டியல்) லுக்காக இந்த இருவரும் தெரிவு செய்யப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. முஹம்மத் இர்ஷாத் கடந்த தேர்தலில் மாளிகாஹேனை வட்டாரத்தில் போட்டியிட்டு 897 வாக்குகளை பெற்றார். எனினும் அவர் வெற்றிபெறவில்லை. அந்த வட்டாரத்தில் கட்சிக்கு கிடைத்த கூடுதல் வாக்குளை கொண்டு (விகிதாசார அடிப்படையில்) அவருக்கு இந்த போனஸ் ஆசனம் வழங்கப்பட்டுள்ளது. பிரபல சமூக சேவையாளரான இவர் எலந்த கொடையை வசிப்பிடமாகக் கொண்டவர். முஹம்மத் நளீம் ஸீனதுல் முனவ்வரா தம்பதிகளின் புதல்வராவார். கடந்த தேர்தலில் எனது வெற்றிக்காக கடுமையாக உழைத்து ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிப் பதாக இர்ஷாத் நளீம் தெரிவித்தார்.

விஷேடமாக ஐக்கிய மக்கள் சக்தி பேருவளை அமைப்பாளர் இப்திகார் ஜமீல், ஐக்கிய மக்கள் சக்தி நிரைவேற்றுக் குழு உறுப்பினர் டாக்டர் ரூமி ஹாஷிம் ஆகியோருக்கும் கட்சி முக்கியஸ்தர்கக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

நகர சபைக்கு போனஸ் உறுப்பினராக தெரிவாகியுள்ள ரிஹானா ரவ்ப் இப்பிரதேசத்தின் பிரபல சமூக சேவையாளராவார். ரிஹானா பவுண்டேசன் ஸ்தாபஹரான இவர்





விதவைப் பெண்களுக்கு சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்ள தையல் இயந்திரங்களை பெற்றுக் கொடுத்து கல்வி, சமூக மற்றும் பொதுப் பணிகளையும் மேற்கொண்டுள்ளார். பேருவளையைச் சேர்ந்த முஹம்மத் ரவ்ப் ஸபிய்யா உம்மா தம்பதிகளின் புதல்வியான இவர் இம்முறை தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போனஸ் பட்டியல் வேட்பாளராக பெயரிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பியகம பிரதேச சபைத் தலைவராக லால் குமாரபேலி பதவிப் பிரமாணம்

**(எம் .டி .எம். ஹனபி)**

பியகம பிரதேச சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் வழக்கறிஞர் லால் குமார பேலி நேற்று (02) காலை 11.29 மணிக்கு சுப நேரத்தில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டு தெல்கொட நகரில் உள்ள பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக தமது கடமைகளை பொறுப்பேற்றார். புதிய தலைவரான வழக்கறிஞர் லால் குமாரபேலி, ஒரு ஆவணத்தில்



கையொப்பமிட்டு தனது கடமைகளை ஆரம்பித்ததை படத்தில் காணலாம். பிரதேச சபையின் பிரதித் தலைவர் சுகத் திசாநாயக்க, பிரதேச சபை உறுப்பினர் பிரியந்த குமார ரணசிங்க, பியகம பிரதேச சபையின் செயலாளர் உபுலி மத்துமகே மற்றும் சபையின் ஏனைய உறுப்பினர்களும் இத் தருணத்தில் கலந்து கொண்டனர்.

# மாளிகாஹேன ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலயத்தில் விமரிசையாக நடைபெற்ற நிகழ்வுகள்

**(பீ.எம்.முக்தார்)**

பேருவளை மாளிகாஹேன ஸேம் ரிபாய் ஹாஜியார் மஹா வித்தியாலயத்தில் கல்வி பயின்று கடந்த 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப்பரீட்சையில் தமிழ் மொழிப் பாடசாலைகளில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தையும், அனைத்து மொழி பாடசாலைகளுக்கிடையில் நான்காம் இடத்தினையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த எம்.எப்.எப் நிஹ்லா உட்பட மருத்துவ மற்றும் வர்த்தக பீடங்களுக்குத் தெரிவாகி சிறப்பான பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்த ஏனைய அனைத்து சாதனை மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் மற்றும் நூற்றாண்டை எட்டிப்பிடித்திருக்கும் பாடசாலையின் விஷேட சின்னம் வெளியீட்டு விழாவும் 2025-05-31 ஆம் திகதி சனிக்கிழமை மாலை பாடசாலை அதிபர் திரு எஸ்.ஆர் குமார் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.







கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ள எம்.எப். எப் நிஹ்லா, ரு/ஹுனு பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ள எம்.எப் பஹ்மா, வயம்பா பல்கலைக் கழக மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ள எம்.யு.எம் ஸைனப், வயம்பா பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ள எம்.எஸ். எப் ஸஹ்தா, பேராதனை பல்கலைக் கழக மருத்துவ விஞ்ஞான ஆய்வுகூட பீடத்திற்கு தெரிவாகியுள்ள எம்.ஆர். எப் ரிப்தா, களனி பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ள எம்.எப் ஹப்ஸா, தென்கிழக்கு பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ள எம்.ஏ.எப் ரைஸா, களனி பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ள எம். எப்.எஸ் ஹஸான் ஆகியோரே விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அஷ்ஷெய்க். முஸ்தபா (ரஹ்) ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக ஸேம் ஜெம்ஸ் (ZAM GEMS) முகாமைத்துவப் பணிப்பாளர் அல்ஹாஜ் அஹ்ஸன் ரிபாய் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக ஸேம் ஜெம்ஸ் (ZAM GEMS) பணிப்பாளர் அல்ஹாஜ் ரீதா ரிபாய், சிறப்பு அதிதிகளாக வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ஆர்.பி லியனகே மற்றும் மொரட்டுவை பல்கலைக் கழக விரிவுரையாளரும், பேராசிரியருமான ரங்கிக ஹல்வதுர ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அதிபர் எஸ்.ஏ குமார் வரவேற்புரை நிகழ்த்தியதோடு, வெலிகமையை சேர்ந்த பிரபல பாடகர் மௌலவி மின்ஸாரின் வாழ்த்துப் பாடலும் இடம் பெற்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பழைய மாணவிகள் சங்கம் சார்பாக பழைய மாணவர்கள் சங்க செயலாளர் டாக்டர். மர்ஜான் ஹூஸைன், சாதனை படைத்த மாணவி நிஹ்லா பைஸர், கோட்டக் கல்வி பணிப்பாளர் திருமதி எம்.ஆர்.பி லியனகே, விஷேட அதிதி மொரட்டுவை பல்கலைக்கழக விரிவுரையாளரும், பேராசிரியருமான ரங்கிக ஹல்வதுர, பிரதம அதிதி ஸேம் ஜெம்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் அல்ஹாஜ் அஹ்ஸன் ரிபாய் ஆகியோர் உரையாற்றினர்.

நூற்றாண்டை நெருங்கியுள்ள ஸேம் ரிபாய் ஹாஜியார் மஹா வித்தியாலயம் கடந்த காலத்தில் நாட்டிற்கும், சமூகத்திற்கும் தலை சிறந்த புத்திஜீவிகளை உருவாக்கிக் கொடுத்துள்ளதை இங்கு உரையாற்றிய அதிதிகள் பாராட்டிப் பேசினர்.

இப்பாடசாலையை கட்டியெழுப்பு வதில், மர்ஹூம் சிறீலங்கா சிகாமணி ஸேம் ரிபாய் ஹாஜியார் ஆற்றிய பணிகளை நன்றியுடன் நினைவு கூர்ந்தனர். இப்பாடசாலையிலிருந்து எதிர்காலத்தில் தலைசிறந்த கல்விமான்கள் உருவாக வேண்டு மென்பதே மர்ஹூம் ரிபாய் ஹாஜியாரின் கனவாகும்.

அந்தக் கனவை நிறைவேற்ற மாணவர்கள் சிறப்பாக கல்வி கற்று சாதனை நிலைநாட்ட வேண்டும். அதில் ஓர் அங்கமாக இன்று பல மாணவர்கள் சிறப்புச் சித்தி பெற்று பல்கலைக்கழகம் பிரவேசிக்கின்றனர். எதிர்காலத்திலும் இதை விடக் கூடுதலான மாணவர்கள் பல்கலைக் கழகம் சென்று பாடசாலைக்கு புகழ் சேர்க்க வேண்டுமென்றும் அதிதிகள் இங்கு வலியுறுத்தினர்.

நிகழ்வில் நூற்றாண்டுக்கான சின்னம் வெளியீட்டு வைக்கப்பட்டதோடு, சாதனை படைத்த மாணவர்களுக்கும், கற்பித்த ஆசிரியர்களுக்கும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை விஷேட அம்சமாகும்.

நிகழ்வில் முன்னாள் அதிபர்கள், முன்னாள் பிரதி அதிபர்கள், முன்னாள் ஆசிரியர்கள், ஊர் பிரமுகர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க, பழைய மாணவர் சங்க, பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள், பெருமளவிலான பெற்றோர்கள், நலன் விரும்பிகள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# பணிகளை ஆரம்பித்த தேசிய மக்கள் சக்தி மேயர் மற்றும் உறுப்பினர்கள்



**(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)**

வரலாற்றுச் சிறப்புமிக்க அனுராதபுரத்தின் வளர்ச்சிக்காக தலைவர்களாக தேர்ந்தெடுக்கப் பட்ட மேயர் என் கருணாரத்ன மற்றும் துணை மேயர் சீதா ஹேரத் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் மாநகர சபை உறுப்பினர்கள் (02) தங்கள் உத்தியோகபூர்வ பணியினை ஆரம்பித்தனர்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகளை சட்டத்திற்கு முன் நிறுத்த வேண்டும்

(கே எ ஹமீட்)

நீதி அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உதுமா லெப்பை கோரிக்கை உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர் புடைய குற்றவாளிகளை ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் சட்டத்திற்கு முன் நிறுத்த வுள்ளதாக ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க நாட்டு மக்களிடம் பகிரங்கமாக தெரிவித்தார். 21 ஆம் திகதி முடிந்தவுடன் அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஜனாதிபதி இன்னும் இரண்டு வாரங்களுக்குள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்பான குற்றவாளிகளுக்கு சட்டத்திற்கு முன் நிறுத்துவார் என அறிவித்தார். இதுவரையும் குற்றவாளிகள் சட்டத்திற்கு முன் நிறுத்தப்படவில்லை.

எனவே நீதி அமைச்சர் விசேட நடவடிக்கை மேற்கொண்டு குற்றவாளிகளை சட்டத்திற்கு முன் நிறுத்த வேண்டும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் ஆலோசனைக் கூட்டம் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்சன நாணயக்கார அவர்களின் தலைமையில் பாராளுமன்ற கட்டிடத்தில் நடைபெற்ற போது அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை கோரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்..

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் தொடர்பான இனவாதத் தலைவர் பயங்கரமாகவே பயங்கரவாதி என தெரிவித்த கருத்து தொடர்பாக நீதி அமைச்சு இதுவரை என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

ஆளுங்கட்சியின் பிரதி அமைச்சர் தொடர்பாக தெரிவித்த இனவாதக் கருத்துக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் நமது நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டை எவ்வாறு கட்டியெழுப்பப் போகிறீர்கள்? என்பதனை தெரிவிக்க வேண்டும்.

இது தொடர்பாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நானயக்கார பதில் அளிக்கையில். பிரதி அமைச்சர் தொடர்பாக கருத்து தெரிவித்த சம்பவம் தொடர்பாக நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இறக்காமத்திற்கான தனியான நீதிமன்றத்தினை உருவாக்க நீதி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் குற்றவயில் நடவடிக்கை முறைச்சட்டக் கோவை (திருத்தம்) சட்டமூல குழு விவாதம் 23.05.2025 ஆம் திகதியன்று நடை பெற்ற போது இக்குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை தனது உரையில். அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இறக்காமப் பிரதேசத்தில் சுமார் 18000 மக்கள் வாழ்கின்றனர். இதில் 94% மான சுமார் 17000 க்கும் மேற்பட்ட மக்கள் தமிழை தாய்மொழியாக கொண்டுள்ளனர். 12 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதான இறக்காமப் பிரதேச செயலகத்திற்கு



உட்பட்ட பிரதேசமானது 2012 ஆம் ஆண்டு வரை அக்கரைப்பற்று நீதி நிர்வாக வலயத்தின் கீழ் காணப்பட்ட தோடு பின்னர் அது அம்பாறை நீதி நிர்வாக வலயத்தின் கீழ் எவ்வித அறிவித்தலும் இன்றி மாற்றப்பட்டு இருந்தது சிங்கள மொழியை நீதிமன்ற மொழியாக கொண்ட அம்பாறை நீதி நிர்வாக வலயத்தின் கீழ் தமிழ் மொழியை தாய்மொழியாக கொண்ட இறக்காமப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பிரதேசம் இணைக்கப்பட்டமையானது அப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களது அடிப்படை உரிமையை மீறுகின்ற ஒரு செயலாகும். அத்தோடு இப் பிரதேசத்தில் வாழ்கின்ற 94% மான தமிழ் பேசும் மக்கள் அம்பாறை நீதிமன்றங்களில் தமது வழக்கு நடவடிக்கைகளை தமக்கு பரீட்சயமற்ற சிங்கள மொழியில் தாக்கல் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர் அத்தோடு வழக்கு நடவடிக்கைகளை கையாள்வதிலும் சிரமப்படுகின்றனர்

எனவே இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

# உயிர் பல்வகைமை பாதுகாப்பு தின வேலைத்திட்டம்



உயிர் பல்வகைமை பாதுகாப்பு தினம் என்ற தொனிப் பொருளில் ஓட்டமாவடி பாலத்திற்கு அருகில் ஆற்றங்கரைப் பகுதி சுத்தம் செய்யப்பட்டது.

உலக சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த நான்காம் நாள் நிகழ்வு திங்கள்கிழமை (02) இடம் பெற்றது.

சுற்றாடல் வாரத்தின் நான்காம் நாள் நிகழ்வு உயிர் பல்வகைமை பாதுகாப்பு தினம் என்ற தொனிப்பொருளில் ஓட்டமாவடி பாலத்திற்கு அருகில் ஆற்றங்கரைப் பகுதி சுத்தம் செய்யப்பட்டதுடன் எதிர்காலத்தில் அந்த பிரதேசங் களின் பொழுது போக்கிற்கு பயன்படுத்தக்கூடிய பிரதேசமாக மாற்றுவதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதா பிரதேச செயலாளர் ஏ.தாஹிர் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிரின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதேச செயலக பிரதி திட்ட பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ், கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் ஏ.எல்.பீர்முஹம்மது ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சபை ஊழியர்கள், அசுவசும பயனாளிகள், ஓட்டமாவடி வடக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள், இளைஞர் கழக பிரிதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



வளமான நாடு மற்றும் அழகான வாழ்க்கையை அடையும் நோக்கில் அனுராதபுரம் மாநகர சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் மாநகர சபையின் உறுப்பினர்கள் (01) வர்த்தக வணிக உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் வசந்த சமரசிங்க முன்னிலைய- ில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட போது பிடிக்கப்பட்ட படம்.

(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

# பிரதேச சபை உறுப்பினராக மல்வானை ஹபீல் ஹஸன் சத்தியப் பிரமாணம்





அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மல்வானை நகர வட்டார பிரிவின் வரலாற்றில் முதற் தடவையாக அரசாங்க கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றியீட்டிய தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த ஹபீல் ஹஸ ன் நேற்று (2) காலை வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அருன கருணாதிலக முன்னிலையில் தெல்கொடையில் அமைந்துள்ள பிரதேச சபை பிரதான காரியாலயத்தில் பிரதேச சபை உறுப்பினராக சத்திய பிரமாணம் செய்து கொண்டார்.

முன்னாள் சபாநாயகரும் தேசிய மக்கள் சக்தியின் பியகம பிரதான அமைப்பாளரும் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அசோக சபுமல் ரன்வல, பியகம பிரதேச சபையின் புதிய தலைவர் சட்டத்தரணி லால் குமாரபேலி,உப தலைவர் சுகத் திஸாநாயக்க உட்பட பல முக்கியஸ்தர்களும் படங்களில் காணப்படுகின்றனர்.



டாக்டர் எம்.ஏ.எம்,சுக்ரி அவர்களின் நினைவேந்தல் நிகழ்வில் இரு புத்தகங்கள் மீண்டும் வெளியிடப்பட்டன. நூலாசிரியர்களான பேராசிரியர் எஸ்.எம்.எம். மஸாஹிர் மற்றும் அஷ்சேக் நௌபாஸ் ஜலால்தீன் ஆகியோரிடமிருந்து சிறப்புப் பிரதிகளை மௌலவி எம்.எஸ்.எம்.தாஸீம்,அல் ஹாஜ் அப்துல்லாஹ் ஹஸன் முபாரக் ஆகியோர் பெற்றுக் கொள்வதனை படத்தில் காணலாம்.

# சவூதி பல்கலையில் phd முடித்த கட்டுகஸ்தோட்டை ஸகி அஹமட்

(உக்குவளை நிருபர்)

இலங்கையைச் சேர்ந்த சாகி அஹமட் சவூதி அரேபிய அரச கிங் அப்துல் அஸீஸ் பல்கலைகழகத்தில் ஆங்கில மொழி கணினி பிரில் ஐந்து வருடகால கல்வியில் தனது 33 வயதில்ீனு முதுமாணி பட்டப் படிப்பை முடித்துள்ளார்.

ஆரம்ப கல்வியை கண்டி கட்டுஸ்தொட்டை திரித்துவ கல்லூரியில் கற்று பின் பேரதனை பல்கலைகழகத்தில் முதுகலை பட்டப்படிப்பை முடித்துள்ள இவர் கண்டி கட்டுகஸ்தொட்டை வீதியில் வசிக்கும் முன்னாள் கண்டி மலையக வானொலி நிலைய பொறியியலாளரும் இதன் முஸ்லிம் சேவையின்



பொருப்பாளருமான அல்ஹாஜ் சிராஜ் லுத்பி -பர்சானா தம்பதிகளின் புதல்வராவார்.

# புதிய பயங்கரவாதச் சட்டங்களைக் கொண்டுவர அரசாங்கத்திற்கு மக்கள் ஆணை வழங்கவில்லை

## தேசிய ஷூரா சபை ஜனாதிபதிக்கு கடிதம்

தற்போதுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்து செய்வதைத் தவிர, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றைப் பிறப்பிக்க ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு எந்தவித மக்கள் ஆணையும் கிடையாது என தேசிய ஷூரா சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் தேசிய ஷூரா சபை விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த சட்டம் 'கறுப்பு ஜூலை' என்ற நாடளாவிய தமிழர்கள் இனப்படுகொலைகளுக்கு வழிவகுத்து, அதன் எதிர்வினையாக வெடித்த பிரிவினைவாத யுத்தம் 33 ஆண்டுகள் நீடித்து நாட்டில் பொருளாதாரப் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த தசாப்தங்களில் நாம் கண்ட ஒரு உண்மை யாதெனில், என்ன பெயரில் வந்தாலும் பயங்கரவாதச் சட்டங்கள் சிறுபான்மையினரை ஒடுக்கவே பயன்படுத்தப்பட்டன என்பதாகும். அது தவிர இன்று நாட்டில் எங்குமே பயங்கரவாத அச்சுறுத்தல் கிடையாது.

இந்நிலைமையில் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் பற்றி அரசாங்கமே பேசுவது சர்வதே சமூகத்தின் மத்தியில் ஒருவித பீதியை உருவாக்கி, பெரியளவில் முன்னேற்றம் கண்டுவரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையையும், வெளிநாட்டு முதலீடுகளையும் மற்றும் பொருளாதார மறு சீரமைப்பையும் பாதிப்பது நிச்சயம்!

அது மட்டுமல்லாமல் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன் தாம் ஆட்சிக்கு வந்தால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒழிப்பதாகவே ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவும் அவரது அரசும் வாக்குறுதியளித்தது. அவ்வாறு செய்வதற்கே மக்கள் ஆணையை வழங்கினார்கள். மாறாக, புதிய பயங்கரவாதச் சட்டங்களைக் கொண்டுவர மக்கள் ஆணை வழங்கவில்லை என்பதையும் தேசிய ஷூரா சபை நினைவூட்ட விரும்புகிறது.

இது தொடர்பாக தேசிய ஷூரா சபை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க அவர்களுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியுள்ளதுடன், அதில் கடந்த 25 ஆண்டுகளில் நிறைவேற்று அதிகாரம் மற்றும் காவல்துறையின் விரிவான அதிகாரங்கள் கிடைக்குமாறு போதுமான பல்வேறு சட்டங்கள் ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளமை பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் முற்றிலுமாக அழிக்கப்பட்டு பதினாறு ஆண்டுகள் கடந்து, தற்போது இங்கு எந்தவித பிரிவினைவாதிகளோ பயங்கரவாதிகளோ இல்லாமல் நாடு சுமுகமாகச் செயற்பட்டு வரும் நிலையில், பயங்கரவாதத் தடுப்பு தொடர்பான புதிய சட்டங்களுக்கு எந்த அவசியமும் கிடையாது எனவும் தேசிய ஷூரா சபை அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு தேசிய ஷூரா சபை எழுதிய கடிதத்தின் முழு வடிவம் பின்வருமாறு:

தேசிய ஷூரா சபை (ளுஊ) தேசிய அளவிலான முஸ்லிம் சமூக அமைப்புக்களை உள்ளடக்கிய பொது சிவில் அமைப்பாகும். இது பிரபல சமூக ஆளுமைகளையும் உள்ளடக்கியதாக அமைகின்றது. 2012 ஆம் ஆண்டு முதல் முஸ்லிம் சமூகத்தின் மீது கட்டவிழ்க்கப்பட்டு நாட்டின் பல இடங்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகள் தொடரப்படுவதற்கு வழிவகுத்த முஸ்லிம் விரோத செயற்பாடுகளின் பின்னணியில், 2013 ஆம் ஆண்டு இந்த அமைப்பு நிறுவப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி தனது சமீபத்திய ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (ீவுயு) வை இரத்து செய்யும் என தெளிவாகவே வாக்குறுதியளித்துள்ளது. ஆனால் பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு பதிலாக வேறொரு சட்டம் கொண்டு வரப்படும் என தேர்தல் விஞ்ஞாபனத்திலோ பிரச்சாரங்களிலோ அறிக்கைகளிலோ தெரிவிக்கப்படவில்லை. 'பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்வது' என்பது தான் வாக்குறுதியாய் அமைந்ததே ஒழிய 'அதற்குப் பதிலாக புதிய சட்டம் கொண்டு வருவது' என்று எங்கேயும் குறிப்பிடப்படவில்லை!

1979 இல் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டதிலிருந்து, தமக்குரிய நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி அப்போதைய ஆட்சியாளர்கள் இந்தச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்தினார்கள். இதுவே 1983 ஆம் ஆண்டு தமிழர் விரோதக் கலவரம் உட்பட தீவிரவாதத்தின் வளர்ச்சிக்கு அமைந்த காரணங்களுள் ஒன்றாக அமைந்தது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் வன்முறையை ஒழிக்கவில்லை மாறாக தீவிரவாதத்தைப் பெருக்கி, நாட்டை 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் நீண்ட போர் ஒன்றில் தள்ளியது. இது நாட்டை பொருளாதார ரீதியாக சீரழித்ததுடன் ஆயுத உற்பத்தி நாடுகளுக்கு பெரும் வருமானத்தை ஈட்டிக் கொடுத்தது.

2009 மே மாதம் யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் பயங்கரவாத தடுப்புச் சட்டமானது முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக உருவான வெறுப்புப் பிரச்சாரங்களைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படவில்லை. 2014 ஆம் ஆண்டு முதல் முஸ்லிம் சமூகத்தின் மீதான தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் இருந்த்தன.

2018ம் ஆண்டில் மட்டும் 25க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன. 21.04.2019ல் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல்களைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவும் ஜனாதிபதி ஆணைக்குழுவும் ஏழு பெரும்பான்மைவாத தீவிரவாத அமைப்புகளின் நடவடிக்கைகளும் ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமாக அமைந்தமையை சுட்டிக்காட்டின.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியில், நாம் தேசிய மக்கள் சக்தியிடம் அதன் வாக்குறுதியை மதித்து பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யுமாறும், அச்சட்டத்துக்குப் பதிலாக வேறு எந்த சட்டத்தையும் கொண்டுவர வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த 25 ஆண்டுகளுக்குள்ளால் ஏற்கனவே பல தடவைகள் புதிய பல்வேறு பாதுகாப்புச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இச்சட்டங்கள் நிர்வாக அதிகாரிகளுக்கும் காவல்துறைக்கும் பரந்த அதிகாரங்களை வழங்கியுள்ளதால் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் உருவாக்குவது தேவையற்றது என்பதனை வலியுருத்துகிறோம்

இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு 16 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. தற்போது தீவிரவாதத்திற்கான எந்த ஆபத்தும் இல்லாத. நிலையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதானது எமது நாட்டைப் பற்றிய ஒரு எதிர்மறையான அபிப்பிராயத்தை உலகளவில் ஏற்படுத்தும். அதன் விளைவாக

சுற்றுலாத் துறை, வெளிநாட்டு முதலீடுகள், மற்றும் பொருளாதார முன்னேற்றங்கள் பாதிப்படையும் என நம்புகிறோம். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கொடூரமான அம்சங்களை மாறுபட்ட பெயரில் மீண்டும் கொண்டுவர சில வெளிநாட்டு தரப்புகள் அழுத்தம் கொடுக்கின்றன. இதன் நோக்கம், இலங்கை இன்னும் தீவிரவாத ஆபத்துக்குட்பட்டதாகவே இருக்கிறது என்ற பிம்பத்தை உருவாக்கி, நாட்டின் பொருளாதார மேம்பாட்டை தடுப்பதாகவும், இந்து சமுத்திரத்தில் நிலவும் பலம் பொருந்திய நாடுகளுக்கிடையிலான மோதல்களில் இலங்கையை அடிமைத்தனமான நிலைக்கு கொண்டு செல்வதாகவும் இருக்கலாம்!

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டமொன்றை உருவாக்கும் நோக்குடன் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் நியமித்துள்ள குழுவில் 90மூ அதிகமானவர்களாக அரச அதிகாரிகள் நியமிக்கப்பட்டமை ஏமாற்றம் அளிக்கின்றது.

இது அரசியலமைப்பின் சுயாதீனத்துக்கும், நீதிக்கும், தேசிய ஒருமைப்பாடுக்கும் முரணானதொரு விடயமாகும். இக்குழுவில் சுயாதீனமான, பல்துறைகளை பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்களுள் ஒரு முஸ்லிம் உறுப்பினரும் இல்லாமை ஏமாற்றம் தருவதாக உள்ளது.

---

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
08 ❖ 12 ❖ 1995



இறைவனடியில்
06 ❖ 06 ❖ 2025

## திரு. கிரிஷாந் இரவிசந்திரன்

(UI/UX Engineer - Remnis Global) (Bambalapitiya Hindu College - 2011 O/L)

கொழும்பு 15, சென் ஜேம்ஸ் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கிரிஷாந் இரவிசந்திரன் அவர்கள் 06.06.2025 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் சிவன் இரவிசந்திரன் (Ravindras Industries) யோகமலர் தம்பதிகளின் ஏக புதல்வனும் திருமதி. சுவேதா ஹரிசன் மற்றும் ஸ்ரீ துர்கா அவர்களின் அன்பு சகோதரரும் திரு. ஹரிசன் அவர்களின் அன்பு மைத்துனரும் லோஹித் அக்ஷைனின் பாசமிகு மாமாவும் காலஞ்சென்ற திரு. காளிமுத்து சிவன் மற்றும் திருமதி. மீனாம்பாள் அவர்களின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் **ஞாயிற்றுக்கிழமை 08.06.2025 நண்பகல் 1.00 மணி முதல் 2.30 மணியளவில் நடைபெற்று அன்றைய தினம் மாலை 3.30 மணியளவில் மாதம்பிட்டிய பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.** இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: திரு. இரவிசந்திரன்
தொ.இல: 077 878 0567 (துர்கா)
077 390 4888 (லவன்)
163, சென்ஜேம்ஸ் வீதி, கொழும்பு 15

---

வாசிப்பீரகு! 29



பிஸ்தாமி அஹமத்

# வாசிப்பும் வாழ்வியலும்

வாசிப்பு எமது வாழ்வியலோடு மிக நெருக்கமான தொடர்பை கொண்ட ஓர் அம்சமாகும்.

எந்தளவு தூரம் எமது வாசிப்பை நாம் திட்டமிட்டு ஒழுங்கமைத்து கொள்கின்றோமோ அது எமது வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். வாழ்வை வளப்படுத்தும். செழிப்பாக்கும். எமது துறை சார்ந்த விடயங்களை மேம்படுத்தும். அதிலே மிகவும் தேர்ச்சியும் நிபுணத்துவமும் பெற்றவர்களாக எம்மை மாற்றும்.

ஏதோ ஒரு துறையில் அல்லது எமக்கு விருப்பமான ஒரு துறையில் நாம் தொடராக வாசிக்கின்ற பொழுது அந்தத் துறையோடு மிக நெருக்கமாக தொடர்பு பட்டிருக்கின்ற ஏனைய துறைகள் குறித்தும் எமக்கு பரந்த அறிவு கிடைக்கும். அத்துடன் நாம் தொடர்பு பட்டிருக்கின்ற துரையோடு ஏனைய துறைகள் எந்தளவு தொடர்பு பட்டிருக்கின்றது என்பதனை இந்த பரந்த வாசிப்பின் மூலமாக நாம் புரிந்து கொள்ள முடியும்.

உதாரணமாக கல்வித்துறையை விசேட துறையாகக் கொண்ட ஒருவர் அவர் ஒரு வாசகராக ஆய்வாளராக இருக்கலாம் எந்த அளவு தூரம் கல்வித்துறையானது இதர துறைகளோடு தொடர்புபட்டிருக்கின்றது என்பதனை இந்த பரந்த வாசிப்பின் மூலமாக புரிந்து கொள்ள முடியும்.

உதாரணமாக கல்வித்துறையானது உளவியல் சமூகவியல் வரலாறு தத்துவம் சமகாலம் சிறுவர் உளவியல் வாழ்வியல் போன்ற எண்ணற்ற துறைகளோடு தொடர்பு கொண்டிருப்பதை நோக்கலாம். ஒருவர் இதர துறைகள் சம்பந்தமான வாசிப்பு இல்லாத பொழுது அது மிகப்பெரும் குறைபாடாக அமையும் அதேபோல அவரது தனிப்பட்ட வாழ்விலும் தொழில் வாழ்விலும் அது மிகப்பெரிய தாக்கத்தை செலுத்தும்.

நாம் எந்தளவு தூரம் வாசிப்பு மனோநிலையில் இருந்து அழகிய சூழலில் தரமான நூலொன்றை தெரிவு செய்து வாசிக்கின்றோமோ அந்தளவுக்கு எமது வாசிப்பின் வீச்செல்லை விசாலமானதாக மாறும்.

கருத்து இறுக்கங்களும் முரண்பாடுகளும் கொண்ட விடயங்களைக் கூட மிக நிதானமாக நடுநிலையில் இருந்து புரிந்து கொள்வதற்கு இத்தகைய வாசிப்பு மனோநிலையும் ஆரோக்கியமான சிந்தனையும் அழகிய சூழலும் களம் அமைக்கும்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் தான் எமது மொழிப் புலமை பாரம்பரியமும் எமது ஈடுபாட்டுடன் கூடிய துறை தொடர்பான தேடலும் விருத்தி அடையும். எமது துறை சார்ப்புலமை ஆழ வேர்விடத் தொடங்கும். எமது புலமைத்துவ தேடல் சார் பணிகளின் தொடர்ச்சி அறத்தொடர்ச்சியாக பேணப்படும். புலமைத்துவ பரிமாணம் உயர்ந்து நிற்கும். அறிவு அழகிய முறையில் பரிமாற்றப்படும்.

இவை எல்லாவற்றுக்கும் வாசிப்பு மனோநிலையும் அழகிய சூழலும் எமக்கு நிச்சயம் வழியமைக்கும்.

# காசாவின் துயரம்.... இறுதி தீர்வை நோக்கி நகருகிறதா..?

எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

உலகத்தில் எந்தவொரு சமூகத்திற்கும் வரதா கொடுமையான பசி என்ற நோய் யை பாலஸ்தீன மக்கள் சந்தித்து வருகின்றனர். ஆயுதம் ஏந்திய தனியார் பாதுகாப்புக் காவலர் ஒருவர், மண் மேட்டின் மேல் நின்று, வேலிகளால் பிரிக்கப்பட்ட குறுகிய பாதைகளில் ஒட்டுமொத்தமாகக் கூடியிருக்கும் ஆயிரக்கணக்கான பாலத்தீனியர்களைக் கண்காணிக்கிறார். அதாவது இந்த ஆயுத மனிதர்கள் எது வேண்டாலும் செய்ய முடியும் என்பதே அவர்களின் நிலையாகும். கடுமையான வளையத்தை உருவாக்கும் நிலையில் பசி என்ற கொடுமையை சந்திக்கும் பாலஸ்தீன மக்கள், அந்த கூட்டம், அந்த வேலியை எதிர்த்துத் தள்ளும்போது, அது வளையத் தொடங்குகிறது.. இஸ்ரேலின் முற்றுகையால், இரண்டு மாதங்களுக்கும் மேலாக புதிய உதவிப் பொருட்களைப் பெறாத காஸா மக்களுக்கு இந்த மையம் மிகவும் முக்கியமானது. எந்த விதத்தில் அநீதி செய்ய முடியுமோ அதே நிலையில் அந்த மக்களிடையே பசி மற்றும் படுகொலை மூலம் யூத சியோனிச வலதுசாரி ராணுவம் எல்லை மீறியது என்பதே யதார்த்தமான நிலையாகும்.

காசா மீது இஸ்ரேல் படைகளின் தொடர் தாக்குதல்களால் அங்குள்ள பாலஸ்தீன மக்கள் பெரும் இன்னல்களை சந்தித்து வருகின்றனர். காசா முழுவதும் உணவு மற்றும் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. உலக நாடுகளின் உதவி பொருட்களை குறைந்த அளவிலேயே காஸாவுக்குள் இஸ்ரேல் அனுமதிப்பதால் ஒரு வேலை உணவுக்கு கூட மக்கள் போராடும் சூழல் உள்ளது. இந்நிலையில் காஸாவின் டெய்ர் அல்-பலாஹ் நகரத்தில் உள்ள ஐநாவின் நிவாரண முகாமை நூற்றுக்கணக்கான பாலஸ்தீன மக்கள் முற்றுகையிட்டனர்.

பின்னர் அங்கு வைக்கப்பட்டிருந்த கோதுமை மாவு, அரிசி, குடிநீர் பாட்டில்களை அவர்கள் அள்ளி சென்றனர். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டதை அடுத்து வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்ட ஐநா பாதுகாப்பு காவலர்கள் கூட்டத்தை கலைத்தனர். ஐநா சபையின் நிவாரண முகாமை மக்கள் சூறையாடிய நிலையில் காஸாவில் நிலவும் உணவு பஞ்சத்தின் தீவிரத்தை உலகிற்கு உணர்த்துவதாக இருக்கிறது. இந்நிலையில் காஸாவில் உணவு பொருள் விநியோகத்தை உடனடியாக அதிகரிக்க ஐநா வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதே சமயம் அவநம்பிக்கையுடன் காணப்பட்ட காசாவின் பொது மக்கள், உதவிப் பொருட்களை வழங்கும் மையத்தில் விழுந்து கிடந்த தடைகளை மிதித்துக் கொண்டு செல்வதை வீடியோக்கள் காட்டின. துப்பாக்கிச் சூட்டின் சத்தம் கேட்டதும், மக்கள் பீதியடைந்து அலறத் தொடங்கினர். பசி உயிர் பாதுகாப்பு அற்ற நிலையில் உலகம் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருப்பதை தான் நாம் காண கூடியதாக இருக்கிறது.அதே சமயம் உதவிப் பொருட்களை விநியோகிக்கும் புதிய திட்டம், இவ்வாறு குழப்பமான முறையில் தொடங்கியது. சமீபத்தில் உருவாக்கப்பட்ட காஸா மனிதாபிமான அறக்கட்டளையால் (புஉகு), இந்த சர்ச்சைக்குரிய புதிய திட்டம் நிர்வகிக்கப்படுகிறது. இந்த அமைப்பு அமெரிக்கா மற்றும் இஸ்ரேலால் ஆதரிக்கப்படுகின்றது. மிகவும் பசியால் வாடும் காஸா மக்களுக்கு உணவளிக்கும் பணியை காஸா மனிதாபிமான அறக்கட்டளை மேற்கொண்டுள்ளது. காஸாவில் இரண்டு மில்லியனுக்கும் அதிகமானோர் பட்டினியால் வாடும் அபாயத்தில் இருப்பதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. உலகத்தில் தற்போது காசாவில் தினமும் பட்டினி சாவுகள் துவங்கி இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.இதற்கிடையில் ஆயுதமேந்திய அமெரிக்கப் பாதுகாப்பு ஒப்பந்ததாரர்களைப் பயன்படுத்தும் இந்த அறக்கட்டளை, காஸாவில் உதவி வழங்கும் முக்கிய அமைப்பான ஐ.நா.வை புறக்கணிக்க முயல்கிறது. உதவி வழங்கும் பிற அமைப்புகள் மற்றும் ஐ.நா.வால் கடுமையாக கண்டிக்கப்பட்டுள்ளது இந்த அமைப்பு. இருப்பினும், மக்களுக்குச் செல்லவேண்டிய



உதவிப் பொருட்களை ஹமாஸ் திருடுவதைத் தடுப்பதற்காக, தற்போதைய உதவி முறைக்கு மாற்றாக புதிய அமைப்பு தேவை என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது, ஆனால் அந்த குழு இதனை மறுக்கிறது.

இதற்கிடையில் காஸா மனிதாபிமான அறக்கட்டளை தலைமையிலான நடவடிக்கையை, ஒழுங்கற்றது என உதவியை எதிர்நோக்கியுள்ள பாலத்தீனியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

காசாவின் துயரம் மற்றும் பசி கற்பனைக்கு அப்பாற்பட்ட ஒன்று என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.. அதே நேரத்தில் யூத சியோனிச வலதுசாரி சித்தாந்தத்தின் தலைமை பொறுப்பை வகிக்கும் பெஞ்சமின் நிதான்யாகு முரண்டு மட்டுமே இந்த ஒரு பிரச்சினையே மேலும் சிக்கலான ஒரு படிநிலை அடைந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. பெஞ்சமின் நிதான்யாகு அரசியல் பதவி ஆசை தான் காசாவில் வாழும் பாலஸ்தீன மக்களை கொடூரமான முறையில் கொலை செய்ய தூண்டுகிறது என்பதே சர்வதேச போரியல் ஆய்வாளர்கள் மத்தியில் எழுந்துள்ள கருத்தாகும்.அநே நேரத்தில் இஸ்ரேலிய நாட்டின் பெரும்பாலான அறிஞர்கள், ரபிக்கள் மற்றும் ராணுவ தலைமை அதிகாரிகள் காசாவை ஒரு போதும் இஸ்ரேலிய அரசு தலைமை ராணுவ நடவடிக்கை மூலம் வெற்றி பெற முடியாத ஒன்று என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வருவது மிகவும் முக்கியமான ஒன்றாகும். இஸ்ரேலின் வாழும் 62 சதவீதம் பொதுமக்கள் போர் நிறுத்தம் தேவை என்று உரக்க குரல் எழுப்பி வரும் நிலையில் இந்த பிரச்சினை தற்போது தீர்வை நோக்கி செல்கிறது என்பதை சில சதவீத கணக்கில் நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

காசாவில் யுத அரசு தலைமை செய்யும் பேரினவாத கொடுமைகளை யூத மக்களும் சர்வதேச சமூகம் மொத்தமாக எதிர்க்கும் நிலை தற்போது உருவாகியுள்ளது மிகவும் முக்கியமான காரணியாக இருக்கிறது. இதற்கிடையில் போர் நிறுத்தம் ஒப்பந்தம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அமெரிக்கா வின் திட்ட வரைவு களை முழுமையாக ஹமாஸ் இயக்கத்தின் போராளிகள் நிராகரித்துள்ளது மிகவும் முக்கியமான ஒன்று என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. இந்த போர் ஆரம்ப கட்டங்களில் இருந்தே ஹமாஸ் இயக்கம் முழுமையாக அதாவது நிரந்தர தீர்வு அடிப்படையில் இருக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்த நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஹமாஸ் இந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தை முற்றிலுமாக நிராகரித்து விட்டது குறிப்பிடத்தக்கது.

அதேநேரத்தில் இந்த நடவடிக்கை வாயிலாக வெறும் 60 நாட்கள் மட்டுமே போர் நிறுத்தம் என்பது எந்தவொரு நிலையிலும் பலனை தராது. இரண்டாவது போர் நிறுத்தம் காலங்களில் ஐ டி எப் படைகள் காசாவில் தங்கி இருக்கும் என்பது போன்ற பிரையோசனம் இல்லாத வெற்று ஒப்பந்தத்தை முற்றிலுமாக நிராகரித்து விட்டது என்பதே உண்மையாகும். இதனால் எந்தவொரு பலனும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும் என்பதை நன்கு உணர்ந்து கொண்ட போராளிகள் இதனைத் நிராகரித்து விட்டதாக பாலஸ்தீன ஆதரவு தளங்கள் செய்திகளை வெளியிட்டு வருகிறது. அமெரிக்க தூதர் ஸ்டீவ் விட்காஃப் முன்வைத்த இந்த முன்மொழிவுக்கு ஹமாஸின் எதிர்வினை என்னவாக இருக்கும் என்பதை சர்வதேச சமூகம் உன்னிப்பாக கவனித்து வருகிறது.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இந்த திட்டத்தை ஏற்றுக் கொண்டதாக பகிரங்கமாக அறிவித்த பின்னர் இந்த நிகழ்வு வந்துள்ளது.

அதாவது பெஞ்சமின் நிதான்யாகு போன்ற தீவிர யுக்தி கொண்டவர்கள் ஒரு திட்டத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ள முன்வந்த நிலையில் அதன் மறைமுக யுக்திகளை ஹமாஸ் நன்கு புரிந்து கொண்டது என்பதே உண்மையாகும்.

அமெரிக்க சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காஃப் முன்வைத்த காசா போர் நிறுத்த திட்டத்தை ஏற்றுக்கொள்ளுமாறு ஹமாஸை இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் காட்ஸ் வலியுறுத்தியுள்ளார். இல்லையெனில் ஹமாஸ் அழிவை சந்திக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் ஹமாஸ் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும் வரை காசாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள் முழு பலத்துடன் தொடரும் என்றும், ராணுவ வீரர்களைப் பாதுகாக்கும் நோக்கில் இஸ்ரேல் கடுமையான வான், தரை மற்றும் கடல்வழி தாக்குதல்களை தொடரும் எனவும் இஸ்ரேல் காட்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

காசாவில் போர் நிறுத்தம் மேற்கொள்வதற்காக அமெரிக்கா முன்வைத்த புதிய செயல்திட்டத்தை இஸ்ரேல் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், ஹமாஸ்/ம் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுகொள்ள வேண்டும் என இஸ்ரேல் தெரிவித்து வருகிறது.

காஸாவில் 60 நாள்களுக்கு போர் நிறுத்தம் மேற்கொள்வதற்கான செயல்திட்டத்தை அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காஃப் இஸ்ரேலிடம் அளித்தார். இஸ்ரேல் அரசு அதை ஏற்பதாக அறிவித்துள்ளது. தற்போது அந்த செயல் திட்டம் ஹமாஸ் அமைப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது.

அந்தத் திட்டத்தில், இரு தரப்பினரும் சண்டையை 60 நாள்களுக்கு முழுமையாக நிறுத்திவைப்பது, தங்களிடம் பிணைக் கைதிகளாக உள்ள 10 பேரை ஹமாஸ் அமைப்பினர் இரண்டு கட்டங்களாக விடுவிப்பது, உயிரிழந்த 18 பிணைக் கைதிகளின் உடல்களை அவர்கள் ஒப்படைப்பது, இஸ்ரேல் சிறைகளில் உள்ள பாலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்படுவது. காஸா பகுதியில் நிவாரண உதவிகளை அதிகப்படுத்துவது உள்ளிட்ட அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்தப் போர் நிறுத்தம் அமலுக்கு வந்து, அது நீட்டிக்கப்பட்டால் அனைத்து பிணைக் கைதிகளும் விடுவிக்கப்படுவார்கள் என்று கரோலின் லீவிட் நம்பிக்கை தெரிவித்தார். ஆனால் காசா போர் நிறுத்தம் தொடர்பாக அமெரிக்கா முன்வைத்துள்ள செயல்திட்டம் இஸ்ரேலுக்கு ஆதரவாக இருப்பதாக ஹமாஸ் அமைப்பு விமர்சித்துள்ளது.

காசாவின் நெருக்கடி தொடரும் வரை இஸ்ரேலிய நாட்டின் முக்கியமான கட்டமைப்புகள் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகும் என்று யெமன் போராளிகள் அமைப்பான ஹொதீக்கள் அறிவிப்பு செய்துள்ளது மிகப் பெரிய அளவில் ஆன பரபரப்பை இஸ்ரேலிய நாட்டில் ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக டெல் அவிவ் பென் கூரியன் விமான நிலையம் மிகுந்த இழப்பை சந்தித்து வருகிறது. லண்டன் மற்றும் சர்வதேச நாடுகள் இருந்து விமானங்கள் மூலம் பயணிகள் வருவது முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இஸ்ரேல் மிகப் பெரிய அளவில் ஆன பொருளாதார பின்னடைவை சந்தித்து உள்ளது.

அதேநேரத்தில் சிரியா நாட்டில் இருந்து முதன் முறையாக பாலஸ்தீன ஆதரவு இஸ்லாமிய ஜிஹாதி குழுக்கள் இரண்டு ராக்கெட் தாக்குதலை நடத்தி இருப்பது இஸ்ரேலுக்கு மிகப் பெரிய அளவில் ஆன சிக்கலை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இஸ்ரேல் நாட்டின் எதிர் கட்சிகள் மிகவும் கடுமையான குற்றச்சாட்டுகள் பெஞ்சமின் நிதான்யாகு வின் வரம்பற்ற நடவடிக்கைகள் தொடர்ந்து கடுமையாக விமர்சித்து வரும் நிலையில் அடுத்து என்ன நடக்கும் என்பதே புரியாத சூழல் காணப்படுகிறது.

இதற்கிடையில் ஈரான் மத தலைவர் செய்யத் அலி கொமேய்னி அமெரிக்கா மற்றும் ஒட்டு மொத்த அரபு நாடுகளுக்கு கடும் எச்சரிக்கை விடுவித்து இருப்பது மத்திய கிழக்கு நாடுகள் இடையே பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. அவரது பேச்சில் அமெரிக்கா மற்றும் யூத சியோனிச வலதுசாரி சித்தாந்தத்தை இந்த பிராந்தியத்தில் இருந்து கறுவருக்க வேண்டும் என்று கூறி உள்ளது தற்போது பேச்சு பொருளாக மாறி உள்ளது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் அமெரிக்கா ஈரான் இடையே ஆன ஐந்து கட்ட அணு ஆயுத பேச்சுவார்த்தை தோல்வி அடைந்த பின்னர் தான் அவர் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

இது போன்ற எல்லா பிரச்சினைகளையும் காசா போர் சுற்றி தான் அமைந்துள்ளது. ஆகவே மத்திய கிழக்கு நாடுகளில் தொடர்ந்து அமைதியற்ற இருக்கமான சூழல் உருவாக இதுவே காரணமாகும். இதற்கிடையில் சவுதி அரேபியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இணைந்து பாலஸ்தீன பிரதேசம் சுதந்திர கோரிக்கை மாநாடு ஒன்றை நடத்த முடிவு செய்து உள்ளது மிகவும் முக்கியமான நகர்வு என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.அதே நேரத்தில் ஸ்பெயின், ஜெர்மன், இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் இரட்டை நாடுகள் தீர்வு ஒன்றை தீர்வு ஏற்படும் என்று கூறி வரும் நிலையில் நிச்சயமாக பாலஸ்தீனம் ஏதாவது வகையில் விடுதலை பெரும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்றாலும் அந்த முழுமையான விடுதலை ஒன்றே இறந்து போன அனைத்து மக்களின் தியாகத்திற்கு தீர்வாக அமையும் என்பதே உண்மையாகும்.

# மீண்டும் சீண்டும் ஞானசார!



எம்.எஸ். அமீர் ஹுசைன்



சில தினங்களுக்கு முன்னர் செய்தியாளர் மாநாடொன்றை நடத்திய பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் இஸ்லாமிய பயங்கரவாதிகள் மற்றும் பயங்கரவாத அமைப்புக்கள் என்று குற்றம்சாட்டி புதிய தகவல்களை வெளியிட்டு மக்கள் மத்தியில் புதிய பீதியை கிளப்பி இருக்கின்றார். ஏற்கனவே இதுபோன்ற நடவடிக்கை காரணமாக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள் காரணமாக குற்றவாளியாக காணப்பட்டு சிறைவாசம் அனுபவித்து மேன்முறையீட்டு மனு காரணமாக பிணையில் விடுதலையாகி இருக்கின்ற ஞானசார தேரர் கடந்த சில வாரங்களாக அடிக்கடி செய்தியாளர் சந்திப்பை நடத்தி ஒன்றில் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக ஏனைய இனத்தவர்களை தூண்டும் வகையில் எதையாவது உளறுவது அல்லது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு எதிராகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவுக்கு எதிராகவும் எதையாவது சொல்லி நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்றார்.

இவ்வாறு அவர் வாரம் ஒரு முறை எதையாவது உளறி வந்தாலும் அதனை மக்களோ அரசாங்கமோ பெரிதுபடுத்தவில்லை என்றாலும் அண்மையில் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு பிரதேசத்தை சம்பந்தப்படுத்தி முன்வைக் கப்படும் அவரது கருத்துக்கள் காரணமாக கிழக்கு மாகாணத்தில் ஏனைய இனங்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் மக்கள் மத்தியில் வீணான சந்தேகங்களும் அச்சமும் பீதியும் ஏற்பட இடமிருக்கின்றது. அதனால் இத்தகைய கருத்துக்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் போதுமான கவனம் செலுத்தி இவரது குற்றச்சாட்டுக்களில் உண்மைத்தன்மை இருப்பதாக இருந்தால் அது தொடர்பாக சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொலிசார் மூலமாக நடவடிக்கை எடுக்க முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். அல்லது இவ்வாறு அடிக்கடி ஞானசார தேரர் கூறிவரும் அப்பட்டமான பொய்யும் புரட்டுமாக இருந்து வரும் குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக மீண்டும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1890 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்கள சமூகத்தின் மறுமலர்ச்சிவாதி என்று கூறப்படுகின்ற அநகாரிக தர்மபால அப்போதைய சந்தர்ப்பங்களில் மிக மோசமான முறையில் முஸ்லிம் விரோத கருத்துக்களை விதைத்து சிங்கள மக்களை தூண்டியதால் 1915 ஆம் ஆண்டு சிங்கள முஸ்லிம் கலவரம் மூண்டது. அதனால் இலங்கை முழுவதிலும் வாழ்ந்த முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டனர். சொத்துக்கள், பொருளாதாரம் இலக்கு வைக்கப்பட்டு அழிக்கப்பட்டன. 1983 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக சிங்கள தேசப்பற்றாளர்களால் மோசமான கருத்துக்கள் பரப்பப்பட்டன. அதன் விளைவு 1983 ஜுலைக் கலவரம் ஏற்பட்டு சுமார் 11000 கோடிக்கு மேற்பட்ட மதிப்புடைய தமிழர்களின் பொருளாதாரம் அழிக்கப்பட்டன. சுமார் 4000 அப்பாவி தமிழர்கள் அளவில் கொல்லப்பட்டனர்.

அதே போன்ற செயலைத்தான் 2010 ஆம் ஆண்டு முதல் பொதுபல சேனா என்ற அமைப்பை வைத்துக்கொண்டு இந்த ஞானசார தேரர் செய்து வருகின்ற நடவடிக்கைகளும் அமைகின்றது. உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டுக்களை புணைந்து சொல்வது. வெறுப்பூட்டும் வகையில் பேச்சுக்களை பேசி கருத்துக்களை பரப்புவது, சிங்கள பௌத்த இளைஞர்கள் மத்தியில் முஸ்லிம்கள் தொடர்பாக அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தி வன்முறைக்கு தூண்டுவது உட்பட மிக மோசமான செயல்களை இந்த ஞானசார தேரர் செய்து வருகின்றார். அவரது இத்தகைய நடவடிக்கைகளின் விளைவே அலுத்கம வன்முறைகள், 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல், திகன கலவரம், மினுவாங் கொட வன்முறைகள் என்று முஸ்லிம்களுக்கு எதிரான பல நாசகார செயல்கள் நடந்துள்ளன.

தற்போதைய அரசியல் மாற்றத்தின் பின்னர் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விரும்பாத இவர் அரசாங்கம் தொடர்பாக அடிக்கடி குற்றச் சாட்டுக்களை முன்வைத்து வருவதோடு அவை அனைத்தும் இஸ்லாமிய அடிப்படைவாதம், பயங்கரவாதம், வஹாபிசம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள் போன்ற விடயங்களை அடிப்படையாக வைத்தாகும். சில தினங்களுக்கு முன்னர் செய்தியாளர் சந்திப்பொன்றை நடாத்தி தெரிவித்த கருத்துக்களும் இந்த கோணத்தில் பார்க்கப்பட வேண்டியவைகளாகும்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் ஏறாவூர் பிரதேசத்தில் பள்ளிவாசல்களில் ஜும்ஆ தினத்தன்று ஒரு துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. அதில் ஷரிஆ சட்டத்தின் அடிப்படையில் ஞானசார தேரரும் ஏறாவூர் சூபிச சங்கத்தின் செயலாளர் ஆப்தீன் காசிம் என்பவரும் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் என்று அச்சிடப்பட்டிருந்தது. இந்த துண்டு பிரசுரத்தை விநியோகித்தவர்கள் லிபிய கடாபி இயக்கம் என்ற பெயரிலான குழு என்றும் குறிப்பிடுகின்றார். அதனால் ஞானசார தேரருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது. அது தொடர்பாக பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு கடிதம் எழுதி பாதுகாப்பு கோரி இருக்கின்றேன். அப்படி பாதுகாப்பு தரப்படாத நிலையில் தனது உடம்பிற்கு ஒரு கீறல் ஏற்பட்டாலும் அதற்கு அரசு பொறுப்பேற்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அவரது இந்த குற்றச்சாட்டு தொடர்பாக பல கோணங்களில் சிந்திக்க வேண்டி இருக்கின்றது. இஸ்லாமிய சமூக அமைப்பில் பள்ளிவாசல்களில் ஜும்ஆ நேரம் என்பது மிக விஷே டமான முக்கியமான நேரமாகும். வெள்ளிக்கிழமை ஜும்ஆ நாளில் அதிகபட்சம் 45 நிமிடங்கள் ஜும்ஆ பிரசங்கம் நடப்பதுண்டு. அந்த நேரத்தில் பள்ளிவாசல்களில் எந்தவிதமான தனிப்பட்ட செயற்பாடுகளும் அனுமதிக்கப்படுவதில்லை. பள்ளிவாசலுக்குள் யாரும் எந்த துண்டுப் பிரசுரமும் பங்கிட முடியாது. இவர் சொல்கின்றபடி பார்த்தால் அந்த பள்ளி நிர்வாகம் தான் ஜும்ஆ நேரத்தில் துண்டுப்பிரசுரம் விநியோகித்தால், அதனை செய்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறான ஒரு குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் உலகில் எந்த பள்ளிவாசலிலும் ஜும்ஆ குத்பா பிரசங்க நேரத்தில் வேறு எந்த காரியத்தையும் இடையில் அனுமதிப்பதில்லை. அத்துடன் ஒரு பள்ளிவாசல் நிர்வாகம் ஒருபோதும் அவ்வாறு செய்வதும் இல்லை.

அதுமட்டுமல்லாமல் ஏறாவூர் பிரதேச சம்பிரதாய முஸ்லிம்களான கபுர் வணங்கிகள் தான் தன்னிடம் வந்து முறையிட்டதாகவும் இரண்டு வாரங்களுக்கு முன்னர் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம் என்றும் 2025.05.20 ஆம் திகதி தெரிவிக்கின்றார். அதே நேரம் ஏறாவூர் பிரதேசத்தில் இருக்கும் பள்ளிவாசல் நிர்வாகிகள் பலரை தொடர்பு கொண்டு இப்படியான துண்டுப் பிரசுரங்கள் ஏதாவது விநியோகிக்கப்பட்டதா என்று கேட்டபோது அவர்கள் அறிந்தவகையில் அப்படி எதுவும் நடக்கவில்லை என்றும் தெரிவிக்கின்றனர். அத்துடன் இந்த சம்பவத்துடன் ஞானசார தேரர் இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிடுகின்றார். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பகுதியில் இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தின் அடிப்படையில் நூற்றுக் கணக்கானவர்களின் தலைகள் துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட் டுள்ளனர், கை, கால்கள், மூக்கு, விரல்கள் வெட்டப்பட்டு தண்டனை வழங்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் இந்த கபுரு வணங்கும் (ஹுப்) சம்பிரதாய முஸ்லிம்களை சுதந்திரமாக நடமாட விடுவதில்லை என்று அவர்களின் பிரதிநிதிகள் வந்து ஞானசார தேரரிடம் முறையிட்டதாகவும் கூறுகின்றார்.

இங்கு முக்கியமான விடயம் ஷரீஆ என்பது அரபியில் சட்டம் என்பதாகும். அந்த அடிப்படையில் இஸ்லாமிய நாடுகளில் நடைமுறையில் இருக்கும் சில தண்டனை முறைகள் உள்ளன. ஆனால் இலங்கையில் முஸ்லிம்கள் 1000 வருடங்களுக்கு மேல் இந்த நாட்டில் வாழ்ந்து வந்தாலும் அந்த தண்டனைகளை இங்கு அமுல் படுத்தியதற்கான ஆதாரங்கள் இல்லை. காரணம் இலங்கை ஒரு முஸ்லிம் நாடு அல்ல. இஸ்லாமிய தண்டனை முறைகளை நிறைவேற்ற தூய முஸ்லிம் நாடாக இஸ்லாமிய ஆட்சி நிலவும் நாடாக இருந்தால் மாத்திரமே அது சாத்தியமாகும். அவ்வாறு பார்க்கின்ற போது ஞானசார தேரர் சொல்வது அப்பட்டமாக ஆதாரமற்ற உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டாகும்.

இங்குள்ள முஸ்லிம்கள் ஒருசில இஸ்லாமிய விடயங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து விடயங்களிலும் நடை முறையில் இருக்கின்ற நாட்டு சட்டத்திற்கு கட்டுப்பட்டவர்களாவர். அவர் எதையோ கற்பனையில் நினைத்துக்கொண்டு சொல்லி கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் களோடு ஒற்றுமையாக வாழும் தமிழர்களையும் கிறிஸ்தவர்களையும் அச்சத்தின் விளிம்பிற்கு கொண்டு வந்து அவர்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி முஸ்லிம்கள் தொடர்பாக வெறுப்புணர்வை கட்டவிழ்த்து விடுவதன் மூலம் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறை சூழல் ஒன்றை உருவாக்க முயற்சி செய்கின்றார் என்பது நன்றாக புலனாகின்றது.

அத்துடன் இஸ்லாமிய பயங்கரவாதிகள் அனைவரும் இப்போது ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் இணைந்திருக்கின்றனர். அதிலும் அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலிலும் கிழக்கு மகாணத்தில் சிலர் போட்டியிட்டு வெற்றியீட்டி இருக்கின்றனர். இவர்கள் கடந்த காலங்களில் இஸ்லாமிய பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்தவர்கள். அவ்வாறே நாட்டில் இஸ்லாமிய பயங்கரவாத செயற்பாடுகளுடன் சம்பந்தப் பட்டவராக இருந்த ஒருவரே பிரதி அமைச்சராக இருக்கின்ற மௌலவி முனீர் முலப்பர் என்றும் இவர்கள் அனைவர்களும் பயங்கரமானவர்கள், அதனால் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இருக்கின்றது. அவ்வாறே அரச தொழில்துறைகளிலும் பலர் புகுந்துள்ளனர் என்ற அடிப்படையிலும் மிக மோசமான முறையில் புரளியை கிளப்பி வருகின்றார். அரச தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் ஊழியர்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தி வருகின்றார்.

நிட்டம்புவையில் இயங்குகின்ற ஒரு அரபு பாடசாலை இஸ்லாமிய பயங்கரவாத செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்டது என்றும் பிரதி அமைச்சர் அதன் அதிபர் என்றும் ஸ்ரீ லங்கா ஜமாஅத்தே இஸ்லாமிய அமைப்பும் நாட்டில் இஸ்லாமிய அடிப்படை வாத மற்றும் பயங்கரவாத செயற்பாடு களுடன் சம்பந்தப்பட்டது என்றும் அந்த அமைப்பு தடை செய்யப்பட வேண்டும் என்றும் குற்றம் சுமத்தி வருகின்றார். ஏதோ ஒருவகையில் ஞானசார தேரர் குறிப்பிடும் சம்பிரதாய முஸ்லிம்கள் என்று அடையாளப்படுத்தும் கபுரு வணங்கிகளான (ஹுப்புல் அவ்லியா) பிரிவின் பிரதிநிதிகள் இவரோடு தொடர்பை வைத்துக்கொண்டு நாட்டில் இருக்கின்ற முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் இஸ்லாமிய அறிஞர்களையும் இவ்வாறாக தவறான கண்ணோட்டத்தில் சுட்டிக் காட்டிக் கொடுக்கும் வேலையை செய்து கொண்டிருப்பதாக கருத இடமிருக்கின்றது. ஆனாலும் அவர்களால் ஞானசார தேரர் தவறான வழிக்கு இட்டுச் செல்லப்படுகின்றார் என்றே சொல்ல முடிகின்றது. அதே நேரம் இஸ்லாமிய சமூக செயற்பாட்டில் அவர்களுக்கு பிரச்சினைகள் இருந்தால் அது தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கான ஒரே இடம் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கின்ற பொலீஸ் நிலையங்களாகும். அவ்வாறு செய்யாமல் ஞானசார தேரரிடம் முறைப்பாடு செய்து நீதி நியாயத்தை தேட ஞானசார தேரர் யார்? அவர் நாட்டின் பொலீஸ் மா அதிபரா அல்லது பாதுகாப்பு அமைச்சரா என்ற கேள்விகளும் எழுகின்றன.

ஏனெனில் முஸ்லிம் சமூகத்தில் புகழ் பெற்ற இஸ்லாமிய சன்மார்க்க போதகர்கள், அறிஞர்கள், அதே போன்ற இஸ்லாமிய தொண்டு நிறுவனங்கள், இஸ்லாமிய சன்மார்க்க அறிவு கூடங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட மனிதர்களையும் நிறுவனங்களையும் அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை வைத்து முடக்க எடுக்கப்படும் முயற்சி மிக ஆபத்தானதாக அமையலாம். இந்த ஞானசார தேரர் குறிப்பிடும் ஸ்ரீ லங்கா ஜமாஅத்தே இஸ்லாமிய அமைப்பு இலங்கையில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்ற ஒரு இஸ்லாமிய சன்மார்க்க மற்றும் சமூக நல செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் தொண்டு நிறுவனமாகும்.

2019 ஏப்ரல் தாக்குலின் பின்னர் புலனாய்வுத்துறையினர் அதுபற்றிய ஆளமான தகவல்களை துருவித் துருவி ஆராய்ந்து தேடல் செய்து பயங்கரவாத செயற்பாட்டுடன் அல்லது அடிப்படைவாத செயற்பாட்டுடன் சம்பந்தம் இல்லை என்ற அடிப்படையில் இந்த அமைப்பு அமைதியான முறையில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. ஏற்கனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் அநியாயமாக கைது செய்யப்பட்ட பலர் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க போதிய ஆதாரம் இன்றி விடுதலை செய்யப்பட்டனர். அதனால் ஞானசார அவர்களை மீண்டும் கைது செய்ய வேண்டும், விசாரணை செய்ய வேண்டும், அவர்களில் பலர் அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் என்று அரசு தொடர்பாக குற்றம் சுமத்த எதுவும் இல்லாத நிலையில் கிழக்கை சம்பந்தப்படுத்தியும் பழைய கதைகளை மீண்டும் சொல்லியும் கீழ்த்தரமான பிரசித்தம் தேட முயற்சி செய்வதும் வெளிப்படையாக தெரிகின்றது.

அதேபோன்று திஹாரியில் அமைந்துள்ள தன்வீர் எகடமி என்ற கல்வி நிறுவ னமானது சிங்கள மொழியில் இலங்கையில் இயங்குகின்ற ஒரு இஸ்லாமிய கல்வி, தொழில்நுட்ப போதனை நிறுவனமாகும். இங்கு இஸ்லாமிய கல்வியுடன் இலங்கையில் கல்வி அமைச்சால் அங்கீ கரிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு அமைவான கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக் கப்படுகின்றன. அந்த நிறுவனம் தொடர் பாகவும் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் புலனாய்வு மற்றும் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணை நடத்தி அதன் தொடர்ச்சியான செயற்பாட்டை அனுமதித்துள்ள நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றதை அவதானிக்கலாம். இவ்வாறாக இஸ்லாத்தையும் முஸ்லிம் சமூகத்தோடு சம்பந்தப்பட்ட அனைத்தையும் பயங்கரவாத செயற்பாடுகளாகவும் பயங்கரவாதிகளாகவும் காட்டி நாட்டில் சிங்கள, தமிழ் சமூகங்கள் மத்தியில் மீண்டும் ஒருமுறை குழப்பத்தையும் இனவாத வன்முறைத் தூண்டலையும் ஏற்படுத்துவதற்கான மும்முரமான முயற்சியில் இந்த தேரர் பகிரங்கமாக ஈடுபட்டு வருவது நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு அவ்வளவு ஆரோக்கியமானதாக இல்லை.

# காத்தான்குடி நகர சபைக்கு தெரிவாகிய உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு

**(எம். பஹத் ஜுனைத்)**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கை தொழிலாளர் கட்சி சார்பில் காத்தான்குடி நகரசபைக்கு தெரிவாகிய நகர முதல்வர், பிரதி நகர முதல்வர் மற்றும் உறுப்பினர்கள் , மண்முனைப் பற்று பிரதேச சபைக்கு தெரிவான ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர், சுயேட்சை குழு உறுப்பினர் ஆகியோருக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (01) காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் இடம்பெற்றது.

நகர சபை முதல்வர் எஸ்.எச். எம்.அஸ்பர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டமுதுமாணி றஊப் ஹக்கீம், கட்சியின் பிரதித் தலைவர், கலாநிதி எம். எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.உதுமா லெப்பை, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். நளீம் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர்.





இந்நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதுடன் கட்சியின் தலைவர் கட்சி ஆதரவாளர்களால் கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# தெலும்புகஹவத்தை முஸ்லிம் வித்தியாலயத்தில் வகுப்பறைக் கட்டிடத் திறப்பு விழா

**(இக்பால் அலி)**

இரண்டு கோடி பத்து இலட்சம் ஷரூபா செலவில் அக்குறணை தெலும்புகஹவத்தை முஸ்லிம் வித்தியாலத்தில் நிர்மாணிக் கப்பட்ட வகுப்பறைக் கட்டிடத் தொகுதி திறப்பு விழா மர்ஹூம் எ.எஸ்.எம்.ரம்ஸீன், எ.எஸ். எம்.இலியாஸ் எ.எஸ்.யாஸ் முஹமட் ஆகிய மூன்று சகோதரர்களின் நன்கொடை நிதி உதவியுடன் இரண்டு கோடி பத்து இலட்சம் ஷரூபா செலவில் அக்குறணை தெலும்புகஹவத்தை முஸ்லிம் வித்தியாலத்தில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டிடத் தொகுதி திறப்பு விழா அதிபர் ஆர்.எப்.ரியாஸா தலைமையில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கட்டுகஸ்தோட்டை கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி சுஜீவ வீரசுந்தர கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதன் போது நன்கொடையாளர் களான எ. எஸ். எம். இல்லியாஸ் , எ. எஸ். ரியாஸ் முஹமட் முன்னாள் ஓய்வு நிலை அதிபர் எஸ். எச். எம். ரியாழ்தீன் ,ஸம் ஸம் அறக்கட்ளையின் இயக்குனர் அஷ்ஷெய்க் முப்தி யூசுப் ஹனிபா ஆகிய முக்கிய பிரமுர்களுடன் ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது பாடசாலை மாணவர்களின் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# சிதம்பரம் கணித போட்டியில் இரு மாணவர்கள் சாதனை

**(எம் எச் எம் சியாஜ்)**

அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற சிதம்பரம் கணித போட்டியில் கற்பிட்டி அல் ஹிரா ஆரம்ப பாடசாலை மாணவர்களான தரம் 04 மொஹமட் நஜாத் பாத்திமா நதா மற்றும் தரம் 05 மொஹமட் மில்ஹான் மொஹமட் மிஹ்ரான் ஆகிய இருவரும் வெற்றி பெற்று சாதனை படைத்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலையின் அதிபர் எம்.எம் நவ்ப் தெரிவித்தார்.



மேலும் இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருமண மண்டபத்தில் இடம்பெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மட்டு montana நிறுவனத்துக்கு Emerging startup விருது

SLCBC Regional excellence Awards- 2025 நிகழ்வானது கடந்த மே 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் J Hotel இல் வெகு விமர்சையாக நடை பெற்றது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாணத்திற்கான Emerging Startup Award விருதானது மட்டக்களப்பு நகரில் இயங்கி வரும் ஆழவெயயெ நிறுவனத்தினருக்கு கிடைக்கப் பெற்றது.




இதில் கருத்து தெரிவித்த நிறுவனத்தின் ஸ்தாபகர் "இந்த அங்கீகாரம் எங்கள் நிறுவனத்தின் முதலாவது மைல்கல்லைக் கடந்ததை உணர்த்துகிறது. எமது நிறுவனத்தின் தொடக்க நாளிலிருந்து குறுகிய காலத்திற்குள் பெறப்பட்ட இந்த முதல் விருதானது எங்கள் குழுவின் கடின உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் புதிதுபுனைவதற்கான இடைவிடாத முயற்சிக்கு ஒரு சான்றாக அமைந்துள்ளதை நினைத்து நாம் பெருமிதம் அடைகிறோம்." என குறிப்பிட்டார்.

இலங்கை முழுவதும் வளர்ச்சி, திறமை மற்றும் பிராந்திய ஆளுமைகளைக் கொண்டாடும் இத்தகைய ஒரு ஊக்கமளிக்கும் தளத்தை ஏற்பாடு செய்தமைக்காக Srilanka – Canada Business council (SLCBC) மற்றும் Ceylon Chamber of Commerce இற்கு தனது நன்றிகளை தெரிவித்த அவர், இந்த அர்த்தமுள்ள விருதை தமது கரங்களுக்கும் சாத்தியமாக்கிய அனைத்து ஆதரவாளர்களுக்கும் நிறுவனத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்தார்.


மேலும் கருத்து தெரிவித்த அவர், கிழக்கு மாகாணத்திலிருந்து வளர்ந்துவரும், ஆற்றல் நிறைந்த தொழில்முனைவோர்களுக்கென வழங்கப்பட்ட இந்த SLCBC REGIONAL EXCELLENCE AWARDS ஆனது, மேலும் ஒரு உந்துதலை எமது நிறுவனத்திற்கு வழங்கியுள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும். MONTANA வின் தொலை நோக்கு பார்வை, அர்ப்பணிப்பு மற்றும் அயராத முயற்சி ஆகியவை இந்த வெற்றிக்குப் பின்னால் உள்ள உந்து சக்திகளாகும் எனவும் குறிப்பிட்டார்.

# 100 கோடி ரூபா பெறுமதியான இரத்தினக்கல் பதித்த கதிரை நாகதீப புராண விகாரைக்கு அன்பளிப்பு

**(ஏ.ஏ.எம். பாயிஸ்)**

சுமார் 100 கோடி ரூபா பெறுமதியா ன 1 இலட்சம் இரத்தின கற்கள் பதி க்கப்பட்ட கதிரை ஒன்றை நாகதீப விகாரைக்கு அன்பளிப்புச் செய்யப் படவுள்ளது. இதனை இரத்தினபுரி பகுதி இரத்தினக்கல் வர்த்தகர்களைக் கொண்ட மினிதய பதனம எனும் அமைப்பு அன்பளிப்பு செய்கிறது.

இதனை நாக தீபத்துக்கு எடுத்துச் செல்லும் பணி (3) இரத்தினபுரி மணிக்கூட்டு கோபுரத்துக்கு அண்மையில் இருந்து ஆரம்பிக்கப் பட்டதுடன்.இந்த மாணிக்ககல் கதிரை களனி மற்றும் தம்புள்ள ரஜமகா விகாரைகளில் மக்களின் பூஜைக்காக வைக்கப்பட்டு ருவன்வெலி மகாசாயவிலும் யாழ்ப்பாணம் நாக தீப விகாரையிலும் வைக்கப்பட்டு கடல் மார்க்கமாக நாக தீப புராண விகாரைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இந்த மாணிக்கக் கல் கதிரையை



அன்பளிப்பு செய்யும் நிகழ்வு இடம் பெறும் என இவ்வமைப்பின் ஏற்பாட்டு குழுவினர் தெரிவித்தனர்.

# உச்ச நீதிமன்ற வழக்கறிஞராக முஹம்மத் அப்தால் பதவியேற்பு

**(பீ.எம் முக்தார்)**

முஹம்மது அப்தால் அஹ்சான் மரிக்கார் (லண்டன் எல்.எல்.பி பல்கலைக்கழகம்) உச்ச நீதி மன்றத்தில் ஒரு வழக்கறிஞராக கௌரவ நீதிபதிகள் யசந்த கோடகொட, ஜனக் டி சில்வா மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகியோர் முன்னிலையில் 15.05.2025 அன்று பதவியேற்றார்.

இவர் மேன்முறையீட்டு நீதிமன்ற கௌரவ நீதியரசர் அஹ்சான் மரிக்கரின் மகனும், பேருவளையைச் சேர்ந்த முன்னாள் பேருவளை



நகர பிதா மர்ஹூம் வழக்கறிஞர் ஏ.டபிள்யூ.எம். ராசிக் மரிக்கரின் பேரனும், மர்ஹூம் சட்டத்தரணி அதா தாசிம் மற்றும் வழக்கறிஞர் ஏ.எல்.எம்.எம். சஹீத் ஆகியோரின் கொள்ளுப் பேரனும் ஆவார்.

# ஈரான் - இஸ்ரேல் இடையே போர் பதட்டம் அதிகரிப்பு...

எஸ்.ஏ. கூஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்கும் அபாயகரமான நிலையை நெருங்கியுள்ளதாக ஐ.நா., சபையின் அணு ஆயுத கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரபேல் குரோஸி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு நிலைகளில் இரண்டு நாடுகள் இடையேயான முறுகல் நிலை உச்சபட்ச நிலையை அடைந்தது. அதன் பின்னர் இரண்டு நாடுகள் இணைந்து 4 கட்ட பேச்சுவார்த்தை வந்து முடிந்துள்ள நிலையில் இதுவரை எந்தவொரு முடிவுகளும் எட்டப்படாத இழுபறி நிலை தொடர்கிறது மற்றும் அல்லாமல் போர் பதட்டம் அதிகரித்து வருகிறது.

ஈரான் அணுசக்தி திட்டம் தொடர்பாக அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா ஆட்சிக் காலத்தில் ஒப்பந்தம் போடப்பட்டது. ஈரான் அணு ஆயுதம் தயாரிக்க கூடாது. அதன் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் என்பது அந்த ஒப்பந்தத்தின் சாராம்சம்.

பிறகு அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்றதும் அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்தார். இதன் பிறகு அந்நாட்டின் மீது பல பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டன. இருப்பினும், ஈரான் தொடர்ந்து அணு ஆயுதம் தயாரிப்பதற்கான பணிகளில் ஈடுபட்டு உள்ளது. இது தொடர்பாக பேச்சுவார்த்தைக்கு அழைத்தும் ஈரான் மறுப்பு தெரிவித்தது. இதையடுத்து, அணுஆயுத தயாரிப்புக்கு எதிரான ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்று ஈரானுக்கு அதிபர் டிரம்ப் தொடர்ந்து மிரட்டல் விடுத்து வந்தார்.

இந்த சூழலில், ஓமன் தலைநகர் மஸ்கட்டில் இருநாடுகளுக்கு இடையே பேச்சுவார்தை நடத்தப்பட்டது. ஆக்கப்பூர்வமான முறையில் பேச்சுவார்த்தை நடந்தாலும், எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை.

இந்த நிலையில், ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்கும் அபாயகரமான நிலையை நெருங்கியுள்ளதாக ஐ.நா., சபையின் அணு ஆயுத கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரபேல் குரோஸ எச்சரிக்கை விடுத்துள்ளார். அணு ஆயுத தயாரிப்பு குறித்து ஈரான் நாட்டு அதிகாரிகளுடன் தெஹ்ரானில் பேச்சு நடத்துவதற்கு முன்பாக இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

மேலும், அவர் கூறியதாவது: ஈரான் அணு ஆயுத தயாரிப்புக்கு தேவையான அனைத்தையும் தயார் நிலையில் வைத்துள்ளது. ஒருநாள் அதனை அவர்கள் இணைப்பார்கள். எங்களிடம் அணு ஆயுதங்கள் இல்லை என்று வாய்மொழியில் சொல்லும் உத்தரவாதங்களை விட, ஆதாரப்பூர்வமான உத்தரவாதங்களையே சர்வதேச நாடுகள் விரும்புகின்றன. எனவே, நாங்கள் அதனை உறுதி செய்ய வேண்டும், எனக் கூறினார்.

இந்த நிலையில் ஓமன் மத்தியஸ்தம் செய்த நிலையில் அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய இரண்டு நாடுகள் பரஸ்பரம் பேச்சுவார்த்தை நடத்தும் நிலையில் அமெரிக்கா பெரியண்ணன் மன நிலையில் ஒற்றை குறிக்கோள் கொண்டு செயல்படுகிறது என்று கருதப்படுகிறது . அதாவது ஒரு பக்கம் பேச்சுவார்த்தை நடத்தி வரும் நிலையில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றொரு பக்கம் எங்கள் கோரிக்கை ஏற்று முழுமையாக அணு ஆயுத சோதனை மற்றும் செறிவூட்டப்பட்ட யூரேனியம் பணிகளை கைவிட வேண்டும் என்று அழுத்தம் தரும் நிலையில் ஈரான் இதற்கு முழுமையாக செவி சாய்க்க மறுத்து விட்டது என்பது தான் தற்போதைய சிக்கலை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈரானின் அணுசக்தி மையங்கள் மற்றும் அதன் உள்கட்டமைப்புகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்த உள்ளது. இதற்கான நடவடிக்கைகளுக்கு இஸ்ரேல் தயாராகி வருகிறது என்று அமெரிக்க உளவுத்துறை எச்சரிக்கை தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கும், ஈரானுக்கும் இடையே மோதல் போக்கு என்பது உள்ளது. ஈரான் தனது ஆதரவு அமைப்புகள் மூலம் இஸ்ரேலுக்கு குடைச்சல் கொடுத்து வருகிறது. காசாவில் ஹமாஸ் அமைப்பு என்பது ஈரான் ஆதரவில் செயல்பட்டு வருகிறது. இப்படியான சூழலில் ஹமாசுக்கு எதிராக காசாவில் இஸ்ரேல் போரை தொடங்கி நடத்தி வருகிறது.

இதற்கு ஈரான் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. அதோடு இஸ்ரேலுடன் எல்லையை பகிர்ந்து வரும் லெபனான் நாட்டில் செயல்பட்டு வரும் ஹெஸ்புல்லா அமைப்பினரை வைத்து இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த ஹெஸ்புல்லா அமைப்பையும் இஸ்ரேல் சமாளித்து வருகிறது.

அதுமட்டுமின்றி இஸ்ரேல் மீது ஈரான் நேரடியாக ஏவுகணை தாக்குதலை நடத்தியது. இதற்கு பதிலடியாக இஸ்ரேல், ஈரான் மீது போர் விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தியது. இதனால் ஈரான் - இஸ்ரேல் இடையே கடும் மோதல் போக்கு உள்ளது. இதற்கிடையே தான் தற்போது ஈரானின் அணுசக்தி மையங்களின் உள்கட்டமைப்புகளை குறிவைத்து இஸ்ரேல் தாக்க திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க உளவுத்துறை சார்பில் வார்னிங் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் கூறியுள்ளதாக சிஎன்என் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. அதில், ஈரானின் அணுசக்தி மையங்கள் மற்றும் அதனை சார்ந்த உள்கட்டமைப்புகளை இஸ்ரேல் குறிவைத்துள்ளது. இதுதொடர்பான நடவடிக்கைகளில் இஸ்ரேல் இறங்கி உள்ளது. விரைவில் தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளது. ஆனாலும் தற்போது வரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை"" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உளவுத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ஈரான் அணுசக்தி மையங்களின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்பு சமீபத்திய மாதங்களில் கணிசமாக அதிகரித்துள்ளது. இருநாடுகள் இடையே அதிகரித்து வரும் பதற்றம் தான் இதற்கு முக்கிய காரணம்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும் ஈரான் அணுஆயுதம் தயாரிக்க முயன்று வருகிறது. இந்த அணுஆயுத தயாரிப்பை கைவிட வேண்டும். அணுசக்தி திட்டத்தின் கீழ் அணுஆயுதம் தயாரிக்க மாட்டோம் என்பது தொடர்பாக தங்களுடன் ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஈரானிடம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக இருநாடுகள் இடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் உடன்பாடு எட்டப்படவில்லை.

இந்த விஷயத்தில் ஈரான் முடிவெடுக்க 60 நாள் காலக்கெடுவை அமெரிக்கா வழங்கியது. இந்த காலக்கெடு முடிவடைந்தும் ஈரான் இன்னும் தாமதித்து வருகிறது. ஈரான் ஒருவேளை ஒப்பந்தம் செய்யாவிட்டால் அமெரிக்காவும், ஈரானை குறிவைக்கலாம். இருப்பினும் தற்போதைய சூழலில் ஈரான் - அமெரிக்கா பேச்சுவார்த்தையில் இணக்கம் நிலவி வருவதால் ஒப்பந்தம் வரை ஈரானை அமெரிக்கா அணுசரித்து செல்லாம் என்றும் சர்வதேச வல்லுநர்கள் கூறுகின்றனர். இருப்பினும் இது இன்னும் சில வாரங்கள் மட்டும் தான் நீடிக்கும். அதன்பிறகும் ஈரான் மவுனம் காத்தாலும் இஸ்ரேலும், ஈரானும் கைகோர்த்து அதிரடி நடவடிக்கைகளை துவங்கலாம் என சர்வதேச வல்லுநர்கள் கருதுகின்றனர்.



ஈரான் வலிமையான ஷியா முஸ்லிம்களை கொண்ட ஒரு தேசமாக தன்னை முன்னிலைப்படுத்தி இருக்கும் நிலையில் அதன் வலிமையான மத தலைவர் அலி கொமேய்னி கொடுக்கும் இறுதி பத்வா அடிப்படையில் தான் போர் நடப்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். ஏற்கனவே ஈரான் ஐசுபுஉா ராணுவ தலைமை தங்கள் இஸ்ரேலிய நாட்டின் தாக்குதலை சந்திக்க தயாராக ஈரான் வான் பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் ரேடார் சிஸ்டத்தை மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாக கூறி உள்ளார்.

ஆகவே, இந்த நிலையில் அமெரிக்கா எது போன்ற வழிகாட்டுதல்களை இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய இரண்டு நாடுகளுக்கும் காட்ட போகிறது என்பதில் தான் இந்த போரின் இறுதி இலக்குகளை நாம் அடையாளம் காண கூடியதாக அமையும் என்பதே இன்றைய கள சூழல் ஆக இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

# பாணந்துறை பிரதேச சபையில் எட்டு முஸ்லிம் உறுப்பினர்கள்..!

(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

பாணந்துறை பிரதேச சபைக்கு எட்டு முஸ்லிம் உறுப்பினர்கள் உள்ளூராட்சி வட்டாரங்களிலிருந்து தெரிவாகியுள்ளதுடன் கட்சிகளின் பட்டியல் உறுப்பினர்களாகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

பாணந்துறை பிரதேச சபையின் கெசல்வத்த ஹேனமுல்ல இரட்டை வட்டாரத்திலிருந்து தேசிய மக்கள் சக்தி சார்பில் எம்.எப்.எம்.பயினாஸ், தொட்டவத்தை வட்டாரத்திலிருந்து ஸ்ரீலங்கா பொதுசன பெரமுன சார்பில் இபாஸ் நபுஹான் மற்றும் வத்தல்பொல வட்டாரத்திலிருந்து ஏ.எச்.எம். முன்ஸிர், அம்பலந்துவ வட்டாரத்திலிருந்து எம்.எஸ்.எம். ரம்ஸான் ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களாக தெரிவாகியுள்ளனர்.

எம்.என்.எம்.தாஹிர்பாஸி-ஐக்கிய மக்கள் சக்தி, எம்.எப்.எம்.நஸ்மி-அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஏ.டபிள்யு.எம்,பஸ்லூன்-சர்வஜன பலய மற்றும் எஸ்.ஏ.எம்.அஸ்ஹார்-ஐக்கிய தேசிய கட்சி ஆகிய கட்சிகளின் மேலதிக பட்டியல் உறுப்பினர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

பாணந்துறை பிரதேச சபையின் முன்னாள் தலைவர்களான ஹேமந்த பெர்னான்டோ மற்றும் நீல் சுனேத்ரலால் பெர்னான்டோ ஆகியோர் ஸ்ரீலங்கா பொதுசன பெரமுன மற்றும் சர்வஜன பலய கட்சிகளின் பட்டியல் உறுப்பினர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.இதே வேளை, முன்னாள் தலைவர் இபாஸ் நபுஹான் ஸ்ரீலங்கா பொதுசன பெரமுன சார்பில் களமிறங்கி தொட்டவத்தை வட்டாரத்தில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.




# ஜூன் 14 கம்பஹா மாவட்டம் தழுவிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் 5000 அதிகாரிகள் களத்தில்

(ரிஹ்மி ஹக்கீம்)

முழு கம்பஹா மாவட்டத்தையும் உள்ளடக்கிய விஷேட ஒருங்கிணைந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒரே நாளில் 60,000 வீடுகளை சோதனை செய்யும் வேலைத்திட்டம் எதிர்வரும் ஜூன் 14 சனிக்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இடம்பெறும் என்று கம்பஹா மாவட்ட செயலாளர் லலிந்த கமகே அண்மையில் (28) தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு தொடர்பான கூட்டத்தில் வைத்து அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது நிலவும் காலநிலையை கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் ஏற்படவுள்ள டெங்கு அபாயத்தை குறைப்பதற்கு இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்காக மாவட்டத்திலுள்ள கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் அத்துடன் குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் என




5000 இற்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

குறித்த தினத்தில் மாவட்டத்திலுள்ள 1177 கிராம சேவகர் பிரிவுகளிலும் குறைந்தது தலா 50 வீடுகள் மற்றும் சுற்றுச்சூழலை சோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த தினத்தில் வீட்டையும் சுற்றுச்சூழலை சுத்தப்படுத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது சம்பந்தமாக பொதுமக்களை அறிவூட்டுதல் மற்றும் குப்பைகளை அகற்றுதல் தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்களின் இணைந்த விஷேட வேலைத்திட்டமொன்றும் உள்ளடக்கப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு கொடி தினம் ஓட்டமாவடியில் ஆரம்பம்





(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு கொடி தின ஆரம்ப நிகழ்வு இன்று திங்கட்கிழமை ஓட்டமாவடி பிரதேச செயலக பழைய கட்டிட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சமுர்த்தி வலய முகாமையாளர் என்.விஜிதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் ஏ.தாஹிர் கலந்து கொண்டார்.

ஏனைய அதிதிகளாக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எம்.ஐ.ஏ.அஸீஸ், முகாமைத்துவப் பணிப்பாளர் ஆர்.மதியழகன், பிரிவு சமுர்த்தி அபிவிருத்தித் உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

பிரதம வளவாளராக மீராவோடை உம்மு சுலைம் மகளிர் அறபிக்கல்லூரியின் பிரதி அதிபர் அஷ்செய்க் ஏ.ஜி.சாதிகீன் மதனி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

# சார்ஜா அல் குர்ஆன் மனனப் போட்டியில் அஷ்ஷெய்க் முஹம்மத் சப்வான் முதலிடம்..!

( பாயிஸ் அன்வாரி)

ஐக்கிய அரபு அமீரகத்தின் சார்ஜாவில் இஸ்லாமிய மற்றும் அரபு மொழி ஆசிரியர்களுக்கு மத்தியில் நடைபெற்ற அல்குர்ஆன் மனனப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த அஷ்ஷேக் முஹம்மத் சப்வான் முஹம்மத் பாஷரூக் ( மதனி, அப்பாஸி)

இப்போட்டியில் இறுதிச் சுற்றுவரை முன்னேறி முதலாவது இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

அஷ்ஷைஃக் சப்வான் மாத்தளை நிகொல்லையை பிறப்பிடமாக் கொண்டவர். காலி இப்னு அப்பாஸ்



அரபுக் கலாபீடத்தில் ஷரீஆக் கல்வியை பூர்த்தி செய்து மதீனா இஸ்லாமிய சர்வதேச பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய சட்டவியல் பீடத்தில் முதற்தர சித்தியில் தனது கலைமாணி பட்டப் படிப்பை பூர்த்தி செய்து தற்போது சார்ஜாவில் அரபு மற்றும் இஸ்லாமிய ஆசிரியராக பணிபுரிகின்றார்.

பல்வேறு நாட்டைச் சேர்ந்த அரபு மற்றும் இஸ்லாமிய ஆசிரியர்கள் கலந்து கொண்ட இப் போட்டியில் இலங்கை ஆசிரியர் ஒருவர் இறுதிச் சுற்று வரை முன்னேறி முதலாவது இடத்தைப் பெற்றது முதற்தடவையாகும். சார்ஜா கல்வி அமைச்சினால் இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# கரைத்தீவு, இலவன்குளம் இணைந்த மஸ்ஜித் நிர்வாகிகள் சம்மேளனம் உருவாக்கம்

முதல் கட்டமாக கரைத்தீவு மஸ்ஜித் நிர்வாகிகள் மற்றும் இலவங்குளம் மஸ்ஜித் நிர்வாகிகள் இணைத்து சம்மேளனம் உருவாக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக்கிளையின் ஏற்பாட்டில் எமது நகரக்கிளைக் குட்பட்ட அனைத்து மஸ்ஜித் களையும் ஒண்றினைத்து



மஸ்ஜித் சம்மேளனம் உறுவாக்க முயற்ச்சிகள் நடைப்பெறுகின்றன.

கரைத்தீவு இலவங்குளம் இஸ்மாயில் புரம் வெப்பமடு புத்தளம் நகரம்

தில்லையடி பாலாவி நாகவில்லு கரிகட்டை அதன் முதல்கட்டமாக கரைத்திவு 11 மஸ்ஜித்கள் இலவங்குளம் 3 மஸ்ஜித்களை இணைத்து மஸ்ஜித் சம்மேளனம் வரும் வெள்ளிக்கிழமை 30.05.2025 இஷா தொழுகையை தொடர்ந்து கரைத்தீவு ஜும்ஆ மஸ்ஜிதில் உருவாக்கப்பட்டுள்ளது.

# இலங்கை ஹாஜிகளுக்கு அறபாவில் வழங்கப்படவுள்ளன சேவைகள் குறித்த கண்காணிப்பு விஜயம்





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

2025 ஆம் ஆண்டிற்கான புனித ஹஜ் கடமைக்காக மக்கா வந்துள்ள இலங்கை ஹாஜிகளுக்கு அல் பைத் அமைப்பினால் அறபா மைதானத்தில் வழங்கப்படவுள்ள சேவைகளை கண்டறியும் கண்காணிப்பு விஜயம் ஒன்றினை இலங்கை ஹஜ் குழுவும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகளும் மேற்கொண்டிருந்தனர்

இன்று இலங்கை ஹஜ் குழு தலைவர் றியாஸ் மிஹ்லார் , தலைமையிலான குழுவில் ஹஜ் குழு உறுப்பினர்களான வை.எல்.எம்.நவவி, பேராசிரியர் அஸ்லம், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் மற்றும் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.எஸ்.அலா அஹமட், கணக்காளர் நிப்றாஸ், வக்பு பிரிவு பிரதம எழுதுனர் ஏ.எஸ்.எம்.ஜாவித், திணைக்களத்தின் காத்தான்குடி இணை அலுவலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சியாட் மற்றும் மக்காவில் இலங்கை ஹாஜிகளுக்கு திணைக்களத்துடன் இணைந்து உதவி வரும் ஸாதிக் ஹாஜியார் உள்ளிட்ட குழுவினர் அறபா மைதானத்திற்கு நேரடியாக சென்று பார்வையிட்டனர்.

ஹாஜிகளுக்கான கூடாரங்கள், இருப்பிட வசதிகள் , கழிவறை வசதிகள் மற்றும் உணவு வசதிகளுக்கான ஏற்பாடுகள் கடந்த வருடங்களைவிட சிறப்பாக செய்யப்பட்டிருப்பதை குழுவினரால் அவதானிக்க கூடியதாக இருந்தது.

இதே வேளை மினாவிலும் ஹாஜிகளுக்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மினா கூடாரத்தில் ஒவ்வொரு ஹாஜிகளுக்கும் படுக்கைக்கான குஸன் மெத்தையில் ஒரு தலையணை, ஒரு இலவச பொதியில் தொழுகை விரிப்பு, குடை, தண்ணீர் பேத்தல், பல் துலக்கும் பிறஸ், பற்பசை, சிறிய பையில் செய்த்தானுக்கு எறியும் சிறிய கற்கள்,தஸ்பீஹ் மணி, கைவிசிறி, என்பனவும் வைக்கப்பட்டுள்ளன, இதபோல் அறபா கூடாரத்திலும் ஒரு பெட்சீட் மற்றும் தலையணை உறை என்பனவும் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்காவில் கடுமையான வெப்பத்திலும், 2025 ஆம் ஆண்டு ஹஜ் கடமைக்காக ஒன்றுகூடியுள்ள ஒரு மில்லியனுக்கும் அதிகமான யாத்ரீகர்கள்

(எம்.ஐ.அப்துல் நஸார், படங்கள் – ஏ.எஸ்.எம். ஜாவித்)



சவூதி அதிகாரிகள் பாதுகாப்பான மற்றும் ஒழுங்கமைப்புடனான ஹஜ் கடமை நிறைவேற்றுதலை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளை தீவிரப்படுத்தியுள்ள நிலையில், 1.3 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கடுமையான பாலைவன வெப்பத்தைத் தாங்கிக்கொண்டு புனித மக்காவிற்கு வந்துள்ளனர், இந்த வாரம் வெப்பநிலை 40 பாகை செல்சியஸ் (104 பாகை பரனைட்) ஐத் தாண்டி உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த வருடம் ஏற்பட்ட துரதிஷ்டவசமான சம்பவம் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்காக, 1,300 க்கும் மேற்பட்டோர் வெப்பம் காரணமாக இறந்தனர், இவர்களுள் பெரும்பாலானவர்கள் முறையாகப் பதிவு செய்யாது ஹஜ் கடமையினை நிறைவேற்றுவதற்காக மக்காவினுள் நுழைந்தவர்களாவர். வெப்பத்தைத் தணிக்கும் கடமையில் ஈடுபடுவதற்காக சவூதி அரேபியா 250,000 அதிகாரிகளையும் 40 நிறுவனங்களையும் ஈடுபடுத்தியுள்ளது. அதிகாரிகள் நிழல் வலயங்களை 50,000 சதுர மீட்டருக்கு விரிவுபடுத்தியுள்ளனர், 400 க்கும் மேற்பட்ட குளிரூட்டும் பிரிவுகளையும் நிறுவியுள்ளனர்.

அத்துடன் புனித நகரம் முழுவதும் வைத்தியப் பணியாளர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் ஒன்றான ஹஜ், அதை மேற்கொள்ள உடல் ரீதியாகவும் நிதி ரீதியாகவும் திறன் கொண்ட முஸ்லிம்கள் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டிய கடமையாகும். கடுமையான வெப்பம் மற்றும் இறுக்கமான பாதுகாப்பு நடவடிக்கைகள் இருந்தபோதிலும், புனித பயணத்தில் பங்கேற்கக் கிடைத்தமைக்கு யாத்ரீகர்கள் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்தனர். "இது உண்மையில் அல்லாஹ்வின் அருளாகும்" பிலிப்பைன்ஸைச் சேர்ந்த யாத்ரீகரான அப்துல் மஜித் அதி தெரிவித்தார்.

அதிகப்படியான மக்கள் மக்காவினுள் நுழைவதைக் கட்டுப்படுத்துவதற்காக, சவூதி அரேபிய அதிகாரிகள் ட்ரோன்கள், செயற்கை நுண்ணறிவு மூலமான கண்காணிப்பு மற்றும் குறுஞ்செய்தி எச்சரிக்கைகளைப் பயன்படுத்தி பதிவு செய்யாத யாத்ரீகர்கள் மீது பெரிய அளவிலான நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளனர். செல்லுபடியாகும் ஹஜ் அனுமதி இல்லாமல் மக்காவினுள் நுழைபவர்கள் நாடுகடத்தப்படுதல், கடுமையான அபராதங்கள் அல்லது சவூதி அரேபியாவிற்குள் நுழைவதற்கு 10 ஆண்டுகள் தடை விதிக்கப்படலாம்.

செனகலைச் சேர்ந்த 52 வயதான மரியமா உட்பட பல யாத்ரீகர்களுக்கு, ஹஜ் ஒரு வாழ்நாள் கனவு நனவாகியுள்ளதை இந்தமுறை யாத்திரை குறிக்கின்றது. "நான் அதைப் பற்றி கனவு கண்டேன், இங்கு வரவேண்டும் என்றே ஒவ்வொரு முறையும் யோசித்தேன்," என அவர் கூறினார். சவூதி அரேபியா ஹஜ் மற்றும் உம்ராவிலிருந்து ஆண்டுதோறும் பில்லியன் கணக்கான வருமானத்தை ஈட்டுகிறது, அதே நேரத்தில் இரண்டு புனித பள்ளிவாயல்களின் பாதுகாவலர் என்ற வகையில் சவுதி அரேபியாவின் மத மற்றும் அரசியல் அந்தஸ்தையும் வலுப்படுத்துகிறது.

---




நாச்சியாதீவு பர்வீன்

# தேசத்தின் கண் பன்னூலாசிரியர் மானா மக்கீனின் பதுளை துங்கிந்த சாரலில் ஒரு "ஜில்" சிறு குறிப்பு!

மானா மக்கீன் என்கின்ற எழுத்தாளுமையை தீவிர வாசகர்கள் யாரும் அத்தனை சீக்கிரம் மறந்து போய்விட மாட்டார்கள். அது மாத்திரமல்லாமல் ஆரம்ப காலங்களில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் முஸ்லிம் நாடகங்கள் கோலோச்சிய காலங்களில் முஸ்லிம் நாடகத்தின் வளர்ச்சிக்கும் அதன் எழுச்சிக்கும் எழுத்தாளர், தமிழ் மாமணி கலாபூஷணம் மானா மக்கீன் ஆற்றிய பங்களிப்பானது மிகவும் சிலாகிக்கத்தக்கதாகும். எனவே முஸ்லிம் சேவையிலே முஸ்லிம் நாடகங்கள் கேட்டவர்களுக்கு இந்த பெயர் மிகவும் பரிச்சயமான ஒன்றாகும். தினகரன் வார மஞ்சரியில் லைட் ரீடிங் எனும் அற்புதமான தகவல் பக்கத்தை தயாரித்து வழங்கிய சிந்தனை சிற்பியவர். அந்த லைட் ரீடிங்கில் தான் எனது பெயரும் முதல் முதலாக (1992) ஒரு தொகுப்பின் மூலம் பத்திரிகையில் வெளிவந்தது என்பது உதிரியான தகவல் ஆகும்.

மானா மக்கீன் போன்ற சிறந்த சிரேஷ்டமான ஆளுமைகளை இந்தச் சமூகம் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். இலங்கை முஸ்லிம் சேவையின் நாடகம் பற்றிய பூரணமான ஒரு வரலாற்றை தன்னகத்தே கொண்டிருக்கின்ற அவர் அந்த வரலாற்றை புத்தக வடிவில் வெளியிட வேண்டும் என்பது வாசகர்களின் அவாவாக இருக்கின்றது. கலாபூஷணம் மானா மக்கீனின் இலங்கை முஸ்லிம் சேவைக்கான பங்களிப்பும் முஸ்லிம் நாடகங்களுக்கான பங்களிப்பையும் பற்றி சிரேஷ்ட எழுத்தாளர் தமிழ் மாமணி அஷ்ரப் சிஹாப்தீன் அவ்வப்போது சிலாகித்து பேசி இருக்கின்றார். முஸ்லிம் சேவையின் முஸ்லிம் நாடகங்கள் தொடர்பில் ஒரு ஆவண காப்பகமாக நடமாடும் நூலகமாக திரு மானா மக்கீன் இருப்பதாக கலாநிதி எம்.சி. ரஸ்மின் ஒரு தடவை என்னிடம் கூறியதை இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அன்று போலவே இன்றும் எழுத்தை நேசிக்கின்ற ஒரு ஆளுமையாக பன்னூலாசிரியர் மானா மக்கீன் திகழ்கிறார். மானாவின் அண்மைக்கால ஆய்வு வகை நூலான பதுளை துங்கிந்த சாரலில் ஒரு "ஜில்" அண்மையில் கண்டியில் வைத்து வெளியிட்டு வைக்கப்பட்டது. பிரதிகளை இலவசமாக வழங்கி மானா புத்தக வெளியீட்டு துறையில் ஒரு புதுமையை நிகழ்த்தினார். தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜில் சுல்தான் இலங்கையிலே பதுளை பகுதியிலே "வெற்றிலை கூர்" விற்பவராக வாழ்ந்து வந்திருக்கிறார். ஜில் சுல்தான் மலையக மக்களின் அவலங்களையும் அவர்களின் உணர்வுகளையும் அவர்கள் அனுபவிக்கின்ற கஷ்டங்களையும் தனது பாடல்களுக்கூடாக ஆவணப்படுத்தி இருப்பதாக அறிய முடிகிறது.

பதுளையைச் சேர்ந்தவரான ஜில் சுல்தான் அவர்கள் (1905 -1979) காலப்பகுதியில் பதுளையில் வாழ்ந்தவர்.இவர் பதுளை நகரத்தில் கூர் வெற்றிலை விற்றுக்கொண்டு நாட்டார் பாடல்களை பாடித் திரியும் ஒரு வீதிப் பாடகராகவே காணப்பட்டார். மலையகச் சமூகத்தின் துயரங்களையும் அவர்களது எதிர்ப்பு செயல்பாடுகளையும் ஒரு கலக குரலாக துங்கிந்த சாரலின் ஓசையோடு எதிரொலித்தவர் இவர். அத்தோடு குடும்பப் பிரச்சினைகளையும் குறிப்பிட்ட சில கொலை நிகழ்வுகளையும் பிரதான பாடுபொருளுக்காக கொண்டு ஜில்லினால் பாடப்பட்ட கொலைச் சிந்துகள் மலையகத்திலே தீவிரமான அரசியல் சமூகப் பிரச்சாரத்திற்காக கையாளப்பட்டன.

அக்காலத்தில் தொழிலாளர் பெருமக்களின் எழுச்சி குரலாக அதிகம் அதிகம் பாடியவர் ஜில் சுல்தான் என்கிறார் ஆசிரியமணி ஆய்வாளர் படைப்பிலக்கியக்காரர் சு. தவச்செல்வன் புத்தகத்தின் பின்னட்டை குறிப்பில் இந்தவிடயத்தை சுருக்கமாக குறிப்பிட்டுள்ளார்.

52 பக்கங்களில் கைக்கு அடக்கமான அழகான சிறிய புத்தகமான இது ஜில்-சுல்தானின் பல்வேறு பரிணாமங்களை பற்றி பலரின் கட்டுரைகளை உள்ளடக்கிய குறிப்புகளை தருகிறது.

"எந்தக் குதிரை வந்தாலும் நம்ம சொந்தக் குதிரை ஆகுமா
கந்த கெதர பஸ்ஸில் ஏறி
சொந்த ஊரு போவோமா"

பதுளைப் பேருந்து நிலையத்தில் இந்தப் பாடலைக் கேட்டதும் கந்தகெதர பேருந்துக்காக காத்திருக்கும் மக்கள் முண்டியடித்துக் கொண்டு ஓட பாடலுக்குச் சொந்தக்காரர் பாடலை தொடர்கிறார்

"வாசமுள்ள ஜில்லு
வாங்கி பார்த்து சொல்லு
வாயில போட்டு மெல்லு -வீட்டு
அக்கா கிட்ட சொல்லு"

வெற்றிலை விற்ற வண்ணமாக மக்களின் அவலங்களையும், துயரங்களையும், சுகத்தையும் துக்கத்தையும் பாடிக்கொண்டிருந்த ஜில் சுல்தான் தோட்டப்புற மக்களின் அபிமானத்தையும் அன்பையும் பெற்ற ஒருவராக திகழ்ந்திருக்கின்றார் என்பதனை இந்த புத்தகம் நிரூபித்து நிற்கிறது.




ஜில்லின் கவிதைகளில் ஒருவகையான மண்வாசனை விரவிக்காணப்படுகிறன என்பதை இந்த புத்தகத்தை வாசித்த மாத்திரத்தில் புரிந்து கொள்ள முடிகின்றது. ஜில்லின் கவிதைகள் எளிமையும் ஆழமும் நிறைந்தவை. அலங்கார சொற்களைக் கொண்டு ஜில் கவிதைகளை ஒப்பனை செய்யவில்லை மாறாக அன்றாடம் காய்ச்சிகளின் மன ஓட்டத்தை மிகவும் துல்லியமாக படம் பிடித்து காட்டும் கண்ணாடியாக அது இருக்கின்றது. தோட்ட மக்களின் அழுகுரலுக்கு ஆறுதலாக, அவர்களின் வலி போக்கும் மருந்தாக ஜில்லின் கவிதைகள் இருந்திருக்கின்றன பாதிக்கப்பட்ட மக்களின் நீதியின் குரலாக ஜில்லின் கவிதைகள் பரிணமித்திருக்கின்றன. கிண்டலும் கேலியும் ஒரு வகை குதூகலமுமாக ஜில்லின் நாட்டுப்புற பாட்டுகள் விளங்குகின்றன. அன்றாடம் நாம் பயன்படுத்துகின்ற எளிய சொற்களை மக்களை கவர்கின்ற வகையில் அழகாக எதுகை மோனையோடு பாடுகின்ற ஆற்றலினை ஜில் பெற்றிருக்கின்றார் ஜில்லின் கவிதைகளுக்கூடாக நம்மை நாம் ஒருமுறை சரிபார்த்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது

"அந்தத் தோட்டம்
இந்தத் தோட்டம்
பப்பாளி தோட்டம்
படுத்த பாய சுருட்டி கிட்டு எடுத்தாண்டி ஓட்டம்"

என்று நகைச்சுவையும் நக்கலும் கலந்த தொனியில் துங்கிந்த சாரலை ரசித்த படியே மக்களின் அவலத்தை ஜில் பாடியுள்ளார்"

உண்மையில் இந்தப் பாடலானது ஒவ்வொரு தோட்டமாக மலையக மக்கள் இடம்பெயர்ந்ததையும் அதனால் ஏற்படுகின்ற அவலத்தையும் நகைச்சுவையாக எடுத்துக் கூறினாலும் இந்த பாடலின் பின்னணியில் பெரும் அவலமும், துயரமும் மறைந்தே கிடக்கின்றது. இந்த புத்தகத்தில் ஜில் பற்றி குடந்தையூரான் பாக்கியசாமியின் கட்டுரையில் இப்பாடல் தொடர்பில் பேசியுள்ளார்.

ஜில்லின் கவிதை ஒன்று மலையக மக்களின் அன்றாட வாழ்க்கையை அச்சொட்டாக படம் பிடித்து காட்டுகின்றது

"நேத்து எடுத்த சம்பளமே
நெருப்பா பறக்குது
என் புருஷன் கண்கள்
இரண்டும் சிவப்பா கிடக்குது
எடுக்கும்போது விலையும் எட்டாயிருக்குது எனக்கு
ஏழு எட்டு பிள்ளைகள்
பிறந்து கிடக்குது"

மலையக தமிழ் இலக்கிய வரலாற்றில் ஜில் சுல்தானின் பெயரும்,பங்களிப்பும் நிச்சயமாக பதியப்பட வேண்டும் என்பதனை மூத்த எழுத்தாளர் மானா மக்கீனின் பதுளை துங்கிந்த சாரலில் ஒரு "ஜில்" என்ற ஆய்வுவகை சிறு நூல் துல்லியமாய் சொல்லி நிற்கிறது.

ஜில் சுல்தான் போன்ற நடமாடும் இலக்கியக்காரர்களை தேடி எடுத்து ஆவணப்படுத்திய தமிழ் மாமணி மானா மக்கீன்; இதயத்து நன்றிகுறியவர்.

---

## எதுவரை?

நோயோடிருந்தாலும்
நொய்தலோடிருந்தாலும்
வாய்த்த நம் காலம் வரை
வாழ்ந்தே நாம் ஆக வேண்டும்

பாயோடு கிடந்தாலும்
பறந்து தான் திரிந்தாலும்
பாதை முடியும் வரை
பயணித்தே ஆக வேண்டும்

செழிப்பாய் இருந்தாலும்
சீரழிவாய் இருந்தாலும்
செல்ல வுள்ள தூரத்தை
சென்றடையத் தான் வேண்டும்

பணத்தோடிருந்தாலும்
பட்டினியில் சுழன்றாலும்
பரீட்சை நடக்கும் வரை
பதில் எழுதி ஆக வேண்டும்

இருளாய் இருந்தாலும்
ஒளியாய் இலங்கினாலும்
இதயம் துடிக்கும் வரை
இயங்கியே ஆக வேண்டும்

கவலையேடிருந்தாலும்
களிப்புடனே இருந்தாலும்
கடக்க வுள்ள எல்லைகளை
கடந்தேதான் ஆகவேண்டும்

சிறகோடிருந்தாலும்
சிறைவாசம் செய்தாலும்
செயற்பாடு நிற்கும் வரை
சீவித்தே ஆக வேண்டும்

விடிவு கிடைத்தாலும்
வேதனையோ டிருந்தாலும்
வினாக்கள் முழுவதற்கும்
விடை எழுதி ஆக வேண்டும்

சுருண்டு படுத்தாலும்
சுறுசுறுப்பாய் படித்தாலும்
முடியும் வரை பரீட்சை
முகம் கொடுத்தே ஆக வேண்டும்

சுகத்தோடிருந்தாலும்
சோர்வோடிருந்தாலும்
சுவாசம் அடங்கும் வரை
சுழன்றுதான் ஆக வேண்டும்!

உக்குவளை
பஸ்மினா அன்ஸார்

# ஹஜ் புனித பயணத்திற்கான அமானாவின் முதல் குழு யாத்ரீகர்களை அனுப்பி வைப்பு

## ஹஜ் யாத்திரிகர்களுக்கு பிரத்தியேக அனுகூலங்களுடன் ஆதரவளிப்பு

2025 ஆம் ஆண்டுக்கான ஹஜ் யாத்திரிகையை மேற்கொண்ட முதல் தொகுதி யாத்திரிகர்களை வழி அனுப்பும் வைபவத்தில் அமானா வங்கியும் பங்கேற்றிருந்தது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில், சவுதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர் காலித் பின் ஹமுத் அல் கஹ்தானி, தேசிய ஒருமைப்பாடுகள் பிரதி அமைச்சர் முனீர் முலாஃபர், மேல் மாகாண ஆளுனர் ஹனீஃப் யூசுஃப், முஸ்லிம் சமய விவகாரங்கள் மற்றும் கலாச்சார விவகார பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ், ஹஜ் குழுவின் தவிசாளர் ரியாஸ் மி/ஹலர் மற்றும் அமானா வங்கியின் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவர் சித்தீக் அக்பர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஹஜ் யாத்திரிகர்களின் பயணத்துக்கு கைகொடுக்கும் வகையில், அமானா வங்கியினால் பிரத்தியேகமான அனுகூலங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதில், சவுதி ரியால்களுக்கு விசேட நாணயமாற்று வீதம், யாத்திரிகையின் போது அமானா டெபிட் கார்டை பயன்படுத்தி மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களுக்கு 10மூ ஊயளாடியஉம (வாடிக்கையாளர் ஒருவருக்கு ரூ. 5>000/- வரை), ஐந்து அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்களுக்கு தங்க நாணய குலுக்கல் தெரிவு மற்றும் இலவச ஹஜ் பிரயாணப் பொதி போன்றன அவற்றில் அடங்கியிருந்தன.

வழி அனுப்பும் நிகழ்வில் அமானா வங்கியின் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவர் சித்தீக் அக்பர் கருத்துத் தெரிவிக்கையில், “இந்த புனித யாத்திரையை மேற்கொள்வதனூடாக, யாத்திரிகரின் நம்பிக்கை மற்றும் இறைவனின் மீதான பக்தி போன்றன வெளிப்படுவதுடன், அவர்களுக்கு வழங்கக்கூடிய சிறந்த உதவிகளை, அனுகூலங்களை மற்றும் வெகுமதிகளை வழங்கி ஆதரவளிக்க முடிந்ததையிட்டு நாம் மகிழ்ச்சி கொள்கிறோம். இந்த முக்கியமான ஆன்மீக ரீதியான மைல்கல்லுக்கு ஆதரவளிப்பது என்பது வங்கியியலுக்கு அப்பாற்பட்டதாக அமைந்திருப்பதுடன் எமது வாடிக்கையாளர்களின் முக்கியமான வாழ்க்கை அத்தியாயத்தில் அவர்களுடன் கூட இருப்பதை எடுத்துக் காட்டுகிறது. அவர்களின் மதசார் கடமையை கண்ணியத்துடனும், இலகுவாகவும் மற்றும் மனநிம்மதியுடனும் நிறைவேற்றுவதில் அங்கம் வகிப்பதையிட்டு நாம் பெருமை கொள்கிறோம்.” என்றார்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் ஐளனுடீ குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. ஐளனுடீ குரூப் ‘AAA’ தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 25 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக ஏசியன் பாங்கர் அமைப்பினால் தரப்படுத்தப்பட்டிருந்தது. அமானா வங்கியின் தரப்படுத்தலை BBB-(lka) stable outlook உடன் முதலீட்டு தரத்துக்கு உயர்த்தியிருந்தது. அதனூடாக, வங்கியின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்துக்கு பல்வேறு வாய்ப்புகளை ஏற்படுத்தியிருந்தது.

அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான ழுசியாயஉஊயசந நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.

அமானா வங்கியின் உப தலைவர் சித்தீக் அக்பர், ஹஜ் யாத்திரிகைக்கான இலவசப் பிரயாணப் பொதிகளை, யாத்திரிகர்களிடம் கையளித்து, அவர்களின் புனித யாத்திரைக்கு வங்கியின் ஆதரவை வெளிப்படுத்துவதை காணலாம்.




பயாஸா பாஸில்



# நீ வெற்றி பெற விரும்பினால்...

1 - உன் மீது நம்பிக்கை கொள்

யார் வேண்டுமானாலும் கருத்துச் சொல்லலாம். அதையும் கதைக்கலாம். ஆனால் உன் மீது நீ கொண்டுள்ள நம்பிக்கையை ஒரு போதும் இழக்காதே. அந்த நம்பிக்கை எப்போதும் உனக்குத் துணையாய் இருக்கும். நீயே உன் மீது நம்பிக்கை இல்லாத போது பிறர் உன்னை நம்புவார்கள் என்று இருந்து விட கூடாது.

எனவே உன் மீதான நம்பிக்கையை அதிகமாக விதை. என்னால் முடியும். நான் செய்வேன். என்று அடிக்கடி உன் மனதை தயார் படுத்து. நிச்சயம் நீ வெல்வாய்...

2 - உற்சாகப்படுத்தும் நண்பர்களை அமைத்துக் கொள்

நீ ஒரு விடயத்தை செய்தால் அல்லது செய்ய நாடினால் உன்னை உற்சாகப்படுத்தி ஊக்குவிக்கக் கூடிய நண்பர்களை பெற்றிருப்பது உனது வெற்றிக்கு வழியமைக்கும். உனக்குத் துணையாய் அவர்கள் இருப்பார்கள். உன்னை பாராட்டுவார்கள். உன் முயற்சிகளுக்கு பக்க பலமாய் இருந்து உன் வெற்றிக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

3 - நேர்மையான உறவுகளை வளர்த்துக் கொள்

உன்னை சுற்றியுள்ள உறவுகளை நேர்மையானவர்களாக இருக்கும் படியாக பார்த்துக்கொள். உன் வெற்றியைக் கொண்டாடும் , உன் நலன்களில் அக்கறை காட்டும் , உன்னோடு சேர்ந்து வாழ ஆசைப்படும் , உனக்கு உண்மையாக ஆதரவு அளிக்கக் கூடிய உறவுகளைப் பெற்றிருப்பதும் உன் வெற்றிக்கான காரணியாகும்.

4 - உன்னை ஊக்குவிக்கிற பாசமுள்ள குடும்பம் அமைதல்

குடும்பம் என்பது நம்மை உயிர் வாழ வைத்துக் கொண்டிருக்கும் அச்சமயம். அவர்கள் நம்மோடு உண்மையான நேசமுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர்களது ஆதரவும் , ஒத்துழைப்பும் என்றும் எமக்கு பக்க பலமாய் இருக்கும்.

5 - உன் சுற்றத்தை மாற்று உன் வாழ்க்கையை மாற்று!

நீ எப்போதும் நினைவில் வைக்க

“நீ எவ்வளவு வலிமையானாலும், உன் சுற்றமும் முக்கியம்.”

உன்னை வளர்க்கும், உன்னை வெற்றி பெறத் தூண்டும் மக்களோடு நீ இருந்தால்தான் நீ உன் கனவுகளை நிஜமாக்க முடியும்!



அரபாத் பஹுர்தீன்



# 18 வருட சம்பியன் கனவை நனவாக்கியது ரோயல் செலர்ஞ்சஸ் பேங்களூரு

இந்தியன் ப்ரீமியர் லீக் ரி20 தொடரின் 18 ஆவது அத்தியாயத்தின் இறுதிப் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியை 6 ஓட்டங்களால் வீழ்த்தி 18ஆவது வருடத்தில் தன் சம்பியன் கனவை நனவாக்கியது ரோயல் செலர்ஞ்சஸ் பேங்களூரு.

உலகின் செல்வந்த கழகங்களுக்கு இடையிலான ரி20 கிரிக்கெட் தொடரான இந்தியன் பிரீமியர் லீக் இன் 18வது பருவகால தொடர் கடந்த மாதம் ஆரம்பித்திருந்தது. வழமை போல் 10 அணிகள் பங்கேற்றிருக்க இம்முறை பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக லீக் ஆட்டங்கள் சில ஒரு வாரங்களுக்கு ஒத்திவைதக்கப்பட்டிருந்தது.

இத் தொடரில் கடத்த 17 பருவகால தொடரை விட இம் முறை ரோயல் செலர்ஞ்சஸ் பேங்களூரு அணியின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது. இதனடிப்படையில் புள்ளிப் பட்டியலில் பஞ்சாப் கிங்ஸ் அணி முதல் இடத்தையும், ரோயல் செலர்ஞ்சஸ் பேங்களூரு அணி இரண்டாம் இடத்தையும் பெற்று முதல் குவளிபயர் போட்டியில் மோதின. இதில் ரோயல் செலர்ஞ்சஸ் பேங்களூரு அணி வெற்றி கொண்டு 3 ஆவது முறையாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

பின்னர் குழு நிலையில் 3ஆம், 4ஆம் இடங்கள் பெற்ற குஜராத் டைடன்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் ஆகிய அணிகள் மோதிய எலிமினேட்டர் வன் போட்டியில் மும்பை அணி வெற்றி கொண்டது.

இந்நிலையில் 2ஆவது குவாளிபயர் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியை எதிர் கொண்ட பஞ்சாப் கிங்ஸ் அணி இலகு வெற்றியுடன் இறுதிப்போட்டியில் ரோயல் செலர்ஞ்சஸ் பேங்களூரு அணியை எதிர்த்துப் பலப்பரீட்சை நடாத்த தகுதி பெற்றது.

இதுவரையில் ஐ.பி.எல் கிண்ணம் வெல்லாத இரு அணிகளும் முதல் முறை சாம்பியன் மகுடன் வென்றெடுக்க வேண்டும் என்ட இருமாப்பேடு அஹமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பலப்பரீட்சை நடாத்தின.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பஞ்சாப் கிங்ஸ் அணி 4 முதலில் பெங்களூார் அணியை துடுப்பெடுத்தாட பனிதாது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடி 190 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நிர்ணயித்தது. பெங்களூார் அணி சார்ப அதிகபட்சமாக விராட் கோஹ்லி 43 ஓட்டங்களையும், ரஜத் பட்டிதார் 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். இவர்களுடன் மயங்க் அகர்வால், ஜித்தேஷ் சர்மா, லியம் லிவிங்ஸ்டன் மற்றும் ரொமாரியோ ஷெப்பர்ட் ஆகியோரும் துடுப்பாட்டத்தில் பங்களித்தனர்.

பஞ்சாப் கிங்ஸ் அணியின் பந்துவீச்சில் அர்ஷ்டீப் சிங் மற்றும் கெயல் ஜெமிஸ ன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு பிரியான்ச் ஆர்யா மற்றும் பிரம்சிங்ரன் சிங் ஆகியோர் ஓரளவு சிறந்த ஆரம்பத்தை பெற்றுக்கொடுத்தனர்.

எனினும் இவர்கள் மந்தமான வேகத்தில் ஓட்டத்தை பெற்றுக்கொடுக்க, அடுத்துவந்த துடுப்பாட்ட வீரர்களில் ஜோஸ் இங்லிஷ் 23 பந்துகளில் 39 ஓட்டங்களைப் பெற்றது விளாசினார். இவரின் ஆட்டமிழப்பின் பின்னர் சிரேயாஸ் ஐயர் வந்தவேகத்தில் ஆட்டமிழக்க, நெஹல் வதேரா மற்றும் சஸாங்க் சிங் ஆகியோர் ஆரம்பத்தில் தடுமாறினார்.

இறுதியாக சஸாங்க் சிங் ஜோஷ் ஹெஸல்வூட்டின் ஓவரில் 22 ஓட்டங்களை விளாசி 30 பந்துகளில் 61 ஓட்டங்களை விளாசிய போதும், 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந் பஞ்சாப் கிங்ஸ் அணி கிண்ணத்தை தவறவிட்டது.

இதேவேளை பெங்களூார் அணிக்காக கடந்த 18 வருடங்களவிளையாடி வந்த வீரரும், ஜீடு தொடரில் ஒரே அணிக்காக ஒரேயொரு வீரருமான விராட் கோஹ்லியும் தன்னுடைய முதல் ஜீடு கிண்ணத்தை சுவீகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் இத் தொடரின் சிறந்த பிடியெடுப்பிற்கான விருதை இலங்கை வீரர் கமந்து மெண்டிஸ் தனதாக்கியமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் காற்பந்தாட்ட லீக்கின் புதிய நிர்வாகம் தெரிவு

## உடனடியாகவே புதிய தொடரும் ஆரம்பம்!




(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் காற்பந்தாட்ட லீக்கின் புதிய தலைவராக புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத்தின் ஸ்தாபக தலைவர் முஹம்மது யமீன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதே வேளை புதிய செயலாளராக அப்துல்லா முராதும், புதிய பொருளாளராக முஹம்மது ரஸ்லானும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் காற்பந்தாட்ட லீக்கின் புதிய நிர்வாகத்தை தெரிவு செய்யும் நோக்கில் அதன் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் புத்தளம் மாநகர சபை விளையாட்டு அரங்கின் கேட்போர் கூடத்தில் அதன் தலைவர் முன்னாள் நகர பிதா எம்.எஸ்.எம். ரபீக் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது புதிய நிர்வாகத்தை தெரிவு செய்யும் நோக்கில் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் ஐ.எம்.நஜீமின் தற்காலிக தலைமையில் நடைபெற்ற அமர்வின் போதே புதிய நிர்வாகம் தெரிவானது.

புத்தளம் காற்பந்தாட்ட லீக்கின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து உடனடியாக முதலாவது புதிய காற்பந்தாட்ட தொடர் ஒன்றும் ஆரம்பமாகியுள்ளது.

இந்த புதிய சுற்றுத்தொடர் ஒரு நாள் தொடராக இம்மாதம் 21 ஆம் திகதி ஆரம்பம்.

# சர்வதேச நட்புறவுப் போட்டி லியோன் பெரேராவின் கோலால் புரூனையை வென்றது இலங்கை




சர்வதேச உதைப்பந்தாட்டப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நட்புறவு உதைப்பந்தாட்டப் போட்டியின் பலமிக்க புரூனே அணியை 1:0 என்ற கோல்கணக்கில் வீழ்த்தி அசத்தல் வெற்றி பெற்றது இலங்கை உதைப்பந்தாட்ட அணி.

பிபா வின் ஏற்பாட்டில் சர்வதேச நட்புறவு போட்டியில் உலக உதைப்பந்தாட்ட தரப்படுத்தலில் 200 ஆம் நிலையிலுள்ள இலங்கை அணி பலமிக்க புரூனே அணியை தாய்லாந்தின் பேங்கொக் நகரிலுள்ள அல்பைன் புட்போல் ஃ பீல்ட் மைதானத்தில் வைத்து நேற்று (5) இலங்கை நேரப்படி பிற்பகல் 2.30 மணிக்கு எதிர்கொண்டது.

விறுவிறுப்பாக ஆரம்பித்த போட்டியின் முதல் பாதியின் ஆரம்ப நிமிடங்களில் இலங்கை வீரர்களின் ஆதிக்கம் மிக அதிகமாக இருந்தது. இதனால் பந்து அடிக்கடி புரூனே கோல் கம்பங்களை முற்றுகையிட்டிருந்தது. இருப்பினும் புரூனேயின் கோல் காப்பாளரின் அசத்தலான ஆட்டத்தினால் இலங்கை அணியால் கோல் கணக்கை ஆரம்பிக்க முடியாமல் போக முதல் பாதி எந்த வித கோலங்களும் இன்றி சமநிலை பெற்றது.

பின்னர் ஆரம்பித்த தீர்மானிக்க 2ஆவது பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் கோலுக்கான முயற்சியில் தீவிரம் காட்டினர். இதனால் போட்டியின் 56ஆவது நிமிடத்தில் வைத்தி இலங்கையின் மத்திய கள வீரரான டெலோன் டி சில்வா கொடுத்த பந்துக் கடத்தலை மிகச் சிறப்பாகப் பெற்ற லியோன் பெரேரா தனது இடக்காலால் பந்தை கோல் கம்பத்தின் வலப்புறத்தில் ஊடாக அடிக்க அதை காக்கும் நடவடிக்கையில் புரூனேயின் கோல் காப்பாளர் தோற்றுப் போக 1:0 என முன்னிலை பெற்றது இலங்கை அணி.

பின்னர் புரூனே அணி வீரர்களின் கோலுக்கான முயற்சிகள் இலங்கை தடுப்பு வீரர்களால் சிதறடிக்கப்பட இலங்கை அணியாலும் மேலதீக கோலை உட்செலுத்த முடியாமல் போக போட்டி நேரம் முழுமையாக நிறைவுக்கு வர பலமிக்க புரூனே அணியை 1:0 என்ற கோல் வித்தியாசத்தில் வீழ்த்தி வரலாறு படைத்தது இலங்கை அணி.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.